விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 12 வெள்ளிக்கிழமை (26.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 189




## யாழ்.குடாநாட்டுப் பத்திரிகைகள் மூன்றும் நேற்று இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிப்பு

### அதிகாலை வேளையில் நடந்த அராஜகம்



(யாழ்ப்பாணம்)

வலம்புரி, உதயன், யாழ் தினக்குரல் ஆகிய மூன்று பத்திரிகைகளும் விநியோகத்திற்காக நேற்று அதிகாலைவேளை எடுத்துச் சென்றபோது இனந்தெரியாத நபர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்திச் சந்தியிலும், யாழ்.கன்னாதிட்டிச் சந்தியிலும் வைத்து மூன்று பத்திரிகைகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

நேற்று அதிகாலைவேளை யாழ்.நகரப் பகுதிக்கும் தென்மராட்சிப் பகுதிக்கும் எடுத்துச் செல்லப்பட வலம்புரிப் பத்திரிகைகளே இவ்வாறு எரிக்கப்பட்டவற்றுள் அடங்குகின்றன.

பத்திரிகை விநியோகஸ்தர்களை பயமுறுத்தி அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளையும் பறித்த பின்னர், பத்திரிகைகள் கட்டுக்கட்டாக (12ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத் தீர்வாயின் போராட்ட அமைப்புகள் உருவாகும்

# புலிகளை நொண்டிச் சாட்டாக வைத்து அரசியல் தீர்விலிருந்து அரசு விலகக் கூடாது

## சபையில் சம்பந்தன் எம்.பி. காட்டம்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை தெரிந்து வைத்துக் கொண்டே சட்ட மூலங்கள் ஊடாக நாட்டை இராணுவ மயமாக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது. இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு பணியாட் தொகுதி தலைமை அதிகாரி சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார். (12ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை எரிப்பு; விசாரணை தீவிரம் பாதுகாப்பு வழங்கவும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலம்புரி, உதயன், யாழ் தினக்குரல் ஆகிய பத்திரிகைகள் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் எரிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து பொலிஸாரும் படையினரும் நேற்று மூன்று பத்திரிகை நிறுவனங்களுக்கும் சென்று விசாரணை நடத்தினர்.

யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி ஜாபர் தலைமையிலான பொலிஸார், வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்பில் காங்கேசன்துறைப் (12ஆம் பக்கம். பார்க்க)

## சில்லறையாகவோ மொத்த அடிப்படையிலோ தேர்தலை சந்திக்க அரசாங்கம் தயார்!

### அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் அதற்குச் சார்பான ஊடகங்களும் அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. அவர்களின் எந்தச் சவாலையும் ஏற்கத் தயார் எனவும் வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் அமைச்சரவை முடிபுகளைத் தெரிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அழித்தொழிக்கப்பட்டாலும் அதன் ஆவிகள் ஆடுகின்றன

### நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ச

(கொழும்பு)

புலிகள் அழித்தொழிக்கப்பட்டாலும், அதன் ஆவிகள் இன்னும் ஆடுகின்றன என்பதனால் வடக்கு கிழக்கில் இராணுவ முகாம்களை நிர்மாணிக்க வேண்டாம் என்று கோருவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எவ்விதமான அருகதையும் இல்லை என்று தேசிய சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கூட்டுப்படைகளின் தளபதி சட்டமூலம் மீதான விவாதத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு முழுவதும் நாளை மின்தடை

(யாழ்ப்பாணம்)

திருத்தவேலை காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ்.குடாநாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என சுன்னாகம் மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னர் வேலைகள் முடிபடைந்தால் முன்னதாகவே மின்சாரம் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-5,14)

## வேட்பு மனுத் தாக்கல் இறுதி நாள் நேற்று

## கூட்டணி-சங்கரி, தமிழரசு-றெமேடியஸ் முதன்மை வேட்பாளர்களாக போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சுயேட்சைக் குழு ஆகியன நேற்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

இதில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடவுள்ள முடியப்பு றெமேடியஸ் முதன்மை வேட்பாளராகவும் கந்தையா (12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை நாளை இடம்பெறாது

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்குமிடையிலான பயணிகள் கப்பல் திருத்த வேலைகளுக்கு செல்ல இருப்பதால் நாளை 27ஆம் திகதியும் மற்றும் 29 ஆம் திகதியும் கப்பல் சேவை இடம்பெறமாட்டாது என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். அடுத்த பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 30 ஆம் திகதியே இடம்பெறுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே எதிர்வரும் 27, 29ஆம் திகதிகளில் கப்பல் பிரயாணத்திற்கான பதிவுகளை யாழ்.செயலகத்தில் மேற்கொண்டவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி பயணத்தை மேற்கொள்ளலாம் எனவும் யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ந-5)

## கொடிகாமத்தில் இளைஞனின் சடலம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் கொடிகாமம் பொலிஸார் சுமார் 30 வயது மதிக்கத்தக்க இளைஞரின் சடலத்தை மீட்டனர்.

பிரஸ்தாப (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பு மனு வவுனியாவில் நிராகரிப்பு

(வவுனியா)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி வவுனியா நகர சபைத் தேர்தலில் தனித்து வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் இணைந்து உருவாக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலேயே யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா தேர்தல்களில் போட்டியிடத் தீர்மானித்திருந்தன.

இதற்கமைய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்திலும், வவுனியாவில் புளொட் அமைப்பின் நங்கூரச் சின்னத்திலும் போட்டியிட இணங்கியிருந்தன.

எனினும் (02ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் குழுவினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சை கணக்கீடு

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கூட்டணியின் விளக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகர சபைத் தேர்தல் சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கூட்டணியின் யாழ். மாவட்ட பணிமனையில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவரும் யாழ் மாநகர சபையின் தலைமை வேட்பாளருமான வீ. ஆனந்தசங்கரி தேர்தல் சம்பந்தமான விளக்க உரையை நிகழ்த்தவுள்ளார்.

கட்சியின் தொண்டர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வேட்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ந-35)

## தமிழர் விடுத...

நேற்றைய தினம் வேட்பு மனுத் தாக்கல் செய்யச் சென்றபோது தமிழர் விடு தலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் எவரும் சமுகமளிக்காததுடன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி தனியாகச் சென்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், அதன் கூட்டணிக் கட்சிகளுக்குமிடையில் ஏற்கனவே சின்னம் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டிருந்த நிலையிலேயே ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வவுனியாவில் தனித்து வேட்பு மனுத் தாக்கல் செய்தது.

எனினும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

# நாடு கடந்த தமிழீழ அரசு ...??? அன்புக்குரிய யாழ்.குடாநாட்டு மக்களே !

நாடு கடந்த தமிழீழ அரசு... ??? என்ற தலைப்பில் நாட்டைக் காக்கும் தமிழர்கள் கூட்டமைப்பு என்ற பெயரில் அநாமதேயமாக வெளியிடப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரம் செவ்வாய்க்கிழமை இரவு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. இது பிரசுரமாகாவிட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று புதனன்று தொலைபேசிமூலம் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.

அந்தப் பின்னணியிலேயே நேற்று குடாநாட்டுப் பத்திரிகைகள் பல இடங்களிலும் விநியோகத்துக்கு செல்லும் சமயம் பலவந்தமாகப் பறிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. தொலைபேசி அச்சுறுத்தல் தொடரும் சூழலில் பாதுகாப்பை முன்நிறுத்தி இத்துண்டுப் பிரசுரம் இங்கே அப்படியே பிரசுரிக்கப்படுகிறது.

நாடு கடந்த தமிழீழ அரசு...???
அன்புக்குரிய யாழ்க்குடா மக்களே!

★ பிரபாகரன் என்ற சுயநலப் பயங்கரவாதி கொல்லப்பட்டு விட்டாரா? உயிரோடுள்ளாரா?

★ முப்பது வருடமாக தமிழீழம் பேசியவர்களால் தமிழர்களான நமக்கு நடந்தது என்ன?

★ எத்தனையாயிரம் எம் உறவுகள் கொல்லப்பட்டனர்?

★ தமிழீழ அபிவிருத்திக்கான நிதிச்சேகரிப்பு என்று மக்களிடமிருந்து பல வழிகளிலும் புலிகளால் வசூலிக்கப்பட்ட பணத்தினால் எமக்கு ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தி என்ன?

★ தமிழ் மக்களுக்கென பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசால்அனுப்பப்பட்ட உதவிப்பொருட்களுக்கும், பணத்துக்கும் என்ன நடந்தது?

★ தமிழர்களின் அரசியல் தலைவர்களென கள்ள வாக்குகள் மூலம் பாராளுமன்றம் சென்றவர்களால் எம் மக்களுக்குக் கிடைத்த உதவிகள்,அபிவிருத்திகள் என்ன?

★ சுனாமி மீள்கட்டுமான உதவிகளால் வன்னியில் மக்களுக்கு ஒழுங்காக எத்தனை வீடுகள் கட்டப்பட்டன? வீதிகள் சரியான முறையில் போடப்பட்டனவா? இவ் அனர்த்தத்திற்காக வெளிநாடுகளும், அரசும் கொடுத்த பணத்தின் தொகை யாது? அதற்கு என்ன நடந் தது?

★ புலிகளின் வார்த்தைகளை நம்பி உயிர் கொடுத்த இளைஞர்,யுவதிகளின் குடும்பங்களுக்கு அவர்களால் என்ன உதவிகள் வழங்கப்பட்டது?

★ பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தியையும் அவரது உடலையும் அரசாங்கம் அறிவித்துக் காட்டியபோது அது பொய்யென் றும், பொம்மையென்றும் கூறியவர்கள் இன்று கூறுவதென்ன?

★ நாட்டில் பலர் கொல்லப்பட்டதற்கும், காணாமல்போனதற்கும் யார் காரணம்?

★ யுத்தத்தின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் படையினரால் கொல்லப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் வருவதாக செய்தி வெளியிட்ட வைத்தியர் சத்தியமூர்த்தி உட்பட்டோர் இன்று நீதிமன்றங்களில் கொடுக்கும் வாக்கு மூலம் விளங்குகிறதா?

★ யுத்தத்தில் தோல்வி காணுகையில் தமிழீழத்தின் மந்திரம், தந்திரோபாயம் என்றால்,இன்று சிலரால் உருவாக்கப்பட்டுள்ள **நாடு கடந்த தமிழீழ அரசுவின்** மந்திரம் யாது?

★ நடந்த தமிழீழப்போராட்டத்தின் பலாபலன் என்ன?

**சிந்தியுங்கள்! யதார்த்தமாகச் சிந்தியுங்கள்!** மேற்குறிப்பிடப்பட்டவற்றுக்கு சரியான பதில் காண்பவர்கள் அறிவாளிகள். மற்றவர்கள் ஏமாளிகள்.30 வருடமாக நாம் பயப்பீதியுடனும்,நின்மதியற்றும் வாழ்ந்தோம்.ஒரு இடத்தில் குண்டு வெடித்தால் அதன் பின் விளைவுகளை சந்தித்தது நாங்கள்தான். பணத்துக்காகவும், பதவிக்காகவும், சுயநலத்திற்காகவும் அழிக்கப்பட்டது நம் உறவுகள்தான்.இன்று முடிவு கிடைத்துள்ளது.அன்று எம்மை ஏமாற்றியவர்களில் தயாமாஸ்ரர், யோச்மாஸ்ரர் போன்றோர் இன்று உண்மைகளை வெளிப்படுத்துகின்றனர்.

சரியாக சிந்தித்து முடிவெடுத்த கருணா அம்மான் போன்றோர் இன்று சிறந்த தமிழ்த் தலைவர்கள்.யதார்த்தத்தை சிந்திக்கத் தெரியாத பிரபாகரனும் அவரோடிருந்தவர்களும் அழிந்துபோன ஏமாற்றுக்காரர்கள். தமிழர்களின் முழுத்துரோகி பிரபாகரன்.பேனா பிடிக்க வேண்டிய நாட்டின் எதிர்கால சிறந்த தமிழ்ப் பிரஜைகளுக்கு சுடுகலன் வழங்கியும், தங்கம் அணிந்து சுதந்திரப் பறவைகளாக இருக்க வேண்டிய சகோதரிகளுக்கு நஞ்சுமாலை அணிந்தும் புலிகளால் அழிக்கப்பட்டுள்ள னர். நாம் இவை தொடர்பாக சிந்திக்க வேண்டியவர்கள். இவ்வாறான கொடூரத்திலிருந்து மீண்டு இன்று சுதந்திரம் அனுபவிக்கத் தயாராகும் எம்மை மீண்டும் ஏமாற்றவும் , அழிக்கவும் இன்னும் சில தமிழ்த்துரோகிகள் முயற்சிக்கின்றனர்.

வெளிநாடுகளில் ஒழித்து வாழ்ந்தபடி தம்மை வளர்த்துக்கொள்வதற்காகவும் பணம் வசூலிப்பதற்காகவும் **பத்மநாதன் (கே.பி), அறிவழகன்,நெடியவன்,றெஜி(TRO)** , உட் பட **நாடு கடந்த தமிழீழ அரசு** என்றதன் பிரதிநிதிகளும் முயற்சிப்பதோடு தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காக தமிழக அரசியல் தலைவர்களும் **தமிழீழம்** என்று கூச்சலிடுகின்றனர். ஈழத்தமிழர்களுக்கெனக்கூறி பணம் வசூலிக்கின்றனர்.பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார், நாடு கடந்த தமிழீழ அரசு என்ற கதைகள் யாவும் இன்னமும் தமிழ் மக்களிடம் மேலும் பணம் வசூலிப்பதற்காகத் தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரில் அறிவுள்ளோர் அரசில் இணைகையில் பணத்தாசை பிடித்தோர் சுயாட்சி என்று தனியே உள்ளனர். சிலர் வெளிநாடுகளில் ஒளிந்துள்ளனர். அனைவரும் எம்மை ஏமாற்றி தம்மை வளர்க்கவே முயற்சிக்கின்றனர்.அனைத்தும் கண் துடைப்பு நாடகமே. வன்னிப்பிரதேசத்தில் எம்முறவுகளுக்கு நிகழ்ந்தவற்றை நலன்புரி நிலையங்களில் உள்ள உறவுகளிடம் கேட்டுப் பாருங்கள். பாலுக்கு அழுத பச்சிலம் குழந்தையைக்கூட புலிப்பயங்கரவாதிகள் சுட்டிருக்கிறார்கள். நாட்டை அபிவிருத்திசெய்யும்தற்போதைய அரசை கடன்காரர்கள், நாட்டில் அக்கறை இல்லாதவர்கள் என்றெல்லாம் வர்ணிக்கின்றனர். இவ்வாறு சொல்பவர்கள் செவிடு,குருடாகத்தான் இருக்கவேண்டும்

ஒரு அடி நிலங்கூட தம்வசம் இல்லாமல் தமிழீழம் வேண்டும் என்று சிலர் பேசுவது வேடிக்கைக்குரியதே! வன்னியில் வசித்த எம் மக்களிடம் பணம் வசூலித்து அதில் ஆயுதம் வாங்கி அந்த ஆயுதத்தால் அதே மக்கள்மீது தாக்குதல் நடத்தியவர்கள் புலிகள்.

எனவே உறவுகளே! நாம் அறிந்தும் அறியாமலும் இவ்வாறான அழிவுகளைச் செய்த புலிகளுக்கு துணைபோயுள்ளோம். முன்பு **நாம் இருளில் நடந்ததால் பள்ளத்தில் விழுந் துள்ளோம்.ஆனால் இன்று விடிந்து விட்டது.** ஆகையால் கடந்த காலத்தில் விட்ட தவறுகளை திருத்தி நம் நாடு, ஒரே நாட்டு மக்கள் என்ற கொள்கையுடன் வாழ்ந்திடுவோம்.இனியும் எதற்கும் ஏமாந்திடாது விழிப்பாக இருப்போம். கிடைத்துள்ள சுதந்திரமும் , சந்தோசமும் பறிபோகாது பாதுகாப்போம். தொடர்ந்தும் முன்பு புலிகளுக்கு துணைபோனது போன்று போவோமேயானால் மீண்டும் மிகப்பெரிய அழிவினை நாம் சந்திக்க நேரிடும்.

எனவே நன்றாக சிந்திக்கவும்.இவ்வளவு விளைவுகள் இடம்பெற்றபின்பும் சிந்தித்து உணரத்தவறுபவர்கள் மனிதப்பிறவியாக இருக்காது.எனவே தொடர்ந்தும் எம்மை ஏமாற்ற முயல்பவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவோமாக! அறிவுள்ள சுதந்திர மனிதர்களாக வாழ்ந்திடுவோம்.

"நாட்டு மக்கள் நாம் ஒற்றுமையாய் வாழ்ந்து நாட்டை வளர்த்திடுவோம்"

நன்றி

"நாட்டைக்காக்கும் தமிழர் கூட்டமைப்பு"

# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வவுனியாவில் நங்கூரம் சின்னத்தில் போட்டி

(வவுனியா)

வவுனியா நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் நேற்று தனித்தனியாக வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

வவுனியாவில் நங்கூரம் சின்னத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈ.பி. ஆர்.எல்.எவ் வரதர் அணி , தமிழர் விடு தலைக் கூட்டணி ஆகிய 3 கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதாக இணக்கம் காணப்பட்டிருந்தது. ·

எனினும் கடைசி நேரத்தில் ஏற்பட்ட இணக்கமின்மை காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி தனியாக வேட்பு மனுவை தாக்கல் செய்யதாக அந்தக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் விநாயகமூர்த்தி சகாயதேவன் தெரிவித்தார்.

முன்னதாக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பு மனுவைத் தாக்கல் செய்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அக் கட்சியின் தலைவர் ரீ.சித்தார்த்தன் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, , ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகிய கட்சிகள் இணைந்து வவுனியாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதாக கூறினார்.

(ந-5)


4ஆம் மாத நினைவஞ்சலி

அமரர் திருமதி சிவநந்தினி வவிதாஸ்



தோற்றம் 01.03.1975 | மறைவு 04.02.2009

உம் நினைவுகள்
என்றும்
எம்மை விட்டு நீங்காது.
உம் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத் துயருடன்–
திருமதி இராசலிங்கம் (தாய்)
சகோதரர்கள்:–
இ.குன்றக்குமரன்,
இ.பார்த்தீபன்,
த.சுதாகினி,
க.சுபாஜினி,
இ.வாசுகி,
இ.விவேகானந்தி,

'இராஜபதி'
இணுவில் மேற்கு,
இணுவில்.

(C-2672)



## தமிழ்மொழிமூல உற்பத்தித்திறன் செயலக வளவாளர்களுக்கான

### விண்ணப்பம் கோரல்

தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு உற்பத்தித்திறன் தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்மொழிமூல வளவாளர் குழாம் (Resource Persons Pool) ஒன்றை உருவாக்க எண்ணியுள்ளது. இதற்காக உற்பத்தித் திறன் வளவாளரை பயிற்றுவிப்பதற்காக செயலாற்றுகைத் திறன் (Presentation Skills) உள்ள அரச, தனியார் துறையைச் சார்ந்த பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இளைப்பாறிய அரச சேவை உத்தியோகத்தர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். பட்டப்படிப்பு அல்லது அதற்கு சமமான கல்வித்தராதரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை தயாரித்து உடனடியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உதவியாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் இரு நாள் பயிற்சி வகுப்பு நடைபெறும் .

பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.

(C-2673)


## வவுனியா முகாமில் ஒருவர் தற்கொலை

(வவுனியா)

வவுனியா இராமநாதன் நிவாரண கிரா மத்தில் ஒருவர் தற்கொலை செய்து கொண் டுள்ளார். இவர் 32 வயது மதிக்கத்தக்க ஒரு ஆசிரியர் எனவும் ஒரு பிள்ளையின் தந்தையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான பாதிப்புக்குள்ளாகிய இவர் மிகவும் மனச்சோர்வடைந்த நிலையில் இருந்தார் எனக் கூறப்படும் அதேவேளை இவரின் தற்கொலைக்கான காரணம் தெரிய வரவில்லை.

(ந-5)


## வீடு வாடகைக்கு

நல்லூர் முத்திரைச் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடன்கூடிய 2அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 0712413075

(2877)

# இன்று ஒரு தகவல்

## குரல் வளம்

இசைவிழாவுக்குப் போயிருந்தேன்.

அங்கே ஒருவர் கணீரென்ற குரலில் பாடிக் கொண்டிருந்தார்.

"அது எப்படி? இந்த வயதிலும் அவருக்கு குரல் மங்கிப் போகாமல் அப்படியே இருக்கிறது?'' என்று பக்கத்தில் உட்கார்ந்திருந்த டாக்டரிடம் கேட்டேன்.

"வயதானால்குரல் வளம்பாதிக்கப்படும் என்றில்லை. வயதுக்கும் குரலுக்கும் சம்பந்தமில்லை'' என்றார் அவர்.

கச்சேரி முடிந்ததும் அவரிடம் சிறிது நேரம் பேசி பல விடயங்களை தெரிந்து கொண்டேன்.

குரல் வளத்தை சரியாக கவனித்தால் 80 வயதைத் தாண்டினால் கூட கணீரென்று பேசலாமாம். பாடலாமாம்.

சரி! இந்த குரல் உதயமாவது எங்கே?

'குரல்நாண்' என்று சொல்கிறோமே 'Vocal chord' அங்கிருந்துதான் இது ஆரம்பம்.

இணைந்த குரல்நாண் வழியாக காற்று உட்புகும் போது அதிர்வு ஏற்பட்டு ஓசை உண்டாகிறது. குரல் நாணுக்கு அசையும் தன்மை உண்டு.

சுற்றியுள்ள தசைகளே இந்த அசைவை ஏற்படுத்துகிறதாம். இந்த அசைவுக்குத் தகுந்தாற் போல் வேறு வேறு ஓசை உண்டாகி வெளியில் வருகிறது.

குரல் வளையில் உதயமாகும் போது குரல்ஓசை குறைவாகத்தான் இருக்கும். ஆனால் குரல்வளைக்கு மேல் வரும் போது இந்த ஓசை அதிகரிக்கிறது.

காற்று வெளியில் வரும் அழுத்தத்துக்கு தகுந்தாற் போல் குரல்நாண் அசைகிறதா? அல்லது குரல் நாணின் அசைவுக்குத் தகுந்தாற் போல் காற்று வெளியில் வருகிறதா? என்பதைப் பற்றி இன்னும் ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிறார்களாம்.

இருந்தாலும் குரல்நாணின் அசைவும், காற்று வெளியே வரும் அழுத்தமும் சேர்ந்து தான் குரல் ஓசை உண்டாகிறது என்பது உண்மை.

இந்த ஓசையைத்தான் நாம் வார்த்தைகளாக மாற்றி எண்ணங்களை பரிமாறிக்கொள்கிறோம்.

பெரும்பாலும் வயதான காலத்தில் குரல்வளத்தை இழப்பவர்கள் யார் என்று பார்த்தால்... இளமையில் மிக அதிகமான சத்தம் போடுபவர்கள் தான்!

ஆசிரியர்கள், சந்தையில் கூவி விற்பவர்கள், மேடைப் பேச்சாளர்கள், பாடகர்கள், நாடக நடிகர்கள், சினிமா நடிகர்கள், அரசியல்வாதிகள்... போன்றோர் தான் முதுமையில் குரல்வளத்தை இழக்கிறார்கள். இந்தப் பட்டியலில் சேராத சிலருக்கும் குரல்வளம் குறைந்து போகிறது என்று பார்த்தால்... அவர்களெல்லாம் வீட்டில் அதிகம் சத்தம் போட்டுப் பேசும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்களாம்.

குழந்தைகளை மிரட்டாதீர்கள். அதனால் கூட உங்கள் குரல் வளம் பாதிக்கப்படும்.

குரல் வளத்தை காப்பாற்ற வேண்டும் என்று நினைப்பவர்கள் என்ன செய்ய வேண்டும்?

சத்தம் போட்டுப் பேசுவதைக் குறைத்தால் மட்டும் போதாது. புகை பிடிக்கக்கூடாது. புகை பிடிப்பவர்களுக் கருகிலும் இருக்கக் கூடாது. மது அருந்தக் கூடாது. அதிக சூடான உணவு,காரமான உணவு இவற்றையெல்லாம் குறைக்க வேண்டும்.

அமிலத்தன்மையற்ற உணவுகள் தான் நல்லது. தொலைபேசியில் பேசும்போது... அடுத்த ஊருக்கே அது நேரடியாகக் கேட்கும் அளவுக்கு சத்தம் போடக் கூடாது. அடிக்கடி கனைப்பதை பழக்கமாக்கிக் கொள்ளக் கூடாது. அதிக வீரியமுள்ள மருந்துகளை (மென்தால்) உட்கொள்ளக்கூடாது.

பொதுவாக பலர் தேவையில்லாமல் வாயைத்திறந்து பேசுவதைக் குறைத்தாலே போதும். குரல் வளத்தைக் காப்பாற்றிவிடலாம்.

சில ஆண்கள் பேசுவதைப் பார்த்தால் பெண்குரல் மாதிரி இருக்கும். கீச்சுக்குரல். இதையெல்லாம் சிகிச்சையின் மூலம் சீராக்கலாமாம்.

தொலைபேசியில் இருவர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ஹலோ! இது பாபு வீடு தானே!''

"ஆமாங்க!''

"என் பையன் ராமு உங்க பையனோடு தான் படிக்கிறான்.''

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்.''

"உங்க குரல் குயில் மாதிரி இனிமையாக இருக்கிறது. நீங்க பாபுவின் அம்மா தானே!''

"இல்லை. அப்பா''

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ் பல்கலைக்கழக

# இதழியல் டிப்ளோமா மற்றும் உடற்கல்வி டிப்ளோமா

# கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 2009/2010 கல்வியாண்டுக்கான இதழியல் டிப்ளோமா (3 ஆவது அணி) மற்றும் 2006/2007 கல்வியாண்டுக்கான உடற்கல்வி டிப்ளோமா (9ஆவது அணி) ஆகிய கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் பதிவாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவானோர் விபரம் வருமாறு,

**இதழியல் டிப்ளோமா**
**(முழுநேரம்)**
**2009 /2010 3 ஆவது அணி**

உ. அபிராமி, அ. யசிகரன், தி. மயூரகிரி, ஜெ. புவனேந்திரதர்சினி, பொ. நிவேதிகா, வி. பகவதி, ஆ. யசோதன், வே. சிவனேசன், ஸ்ரீ. மயூதரன், ச.லக்ஸ்மிகாந்தன், வி. கஜீபன், ச. சுபானுகா, ச. சதீஸ்குமார், ஜெ. நிவர்சன், ந. நிசாந்தன், ச. வினோதா, ஜெ. அபிராமி, க. அனோஜன், ப. சிந்துஜன், சு. ஜெயசீலன், பொ. சோபிகா ஸ்மைலினி, ம. மயூரன், தே. சுபேசன், பா. மேகலதன், சோ. ஜனார்த்தனன், த. ஜீன், பே. வனஜா, பு. செந்தீபன், சி. ராகுலன், வ. சிவசுதன், சி. மதுசீலன், யோ. ஜனனி, ஈ. கார்த்திகா, யோ. வித்தியா, த. தினேஷ், வே. நிஷாந்தி, ஆ. அருட்செல்வி, க. பபிதாரகா, ப. சிவகணேசன், வ. கங்கா, ஜீ. தர்சன், பா. தயானந்தன், மு. கீதாஞ்சலி, பூ. பராசக்தி, செ. ரோமியா, ஆ. மோகனரோகினி, ஜெ. அச்சுதன், ஜெ. சுகனியா, வி. விமலசந்திரா, செ. ஜெறோம் நிஷாந்தன்.

**உடற்கல்வி டிப்ளோமா**
**(முழுநேரம்)**
**2006/2007 9 ஆவது அணி**

எ. வினோஜா, சி. யாழினி, ஜெ. டிலான், சி. கலாதேவி, க. விஸ்வேதிகா, ப. மதனராஜ், ச. மஜீபன், ச. சந்திரமோகன், அ. ஜனார்த்தனா, ம. சலூஜா, க. கலைஞானரதன், த. நிருஷந்த், இ. யூட்கமிலாஸ், கு. அரவிந்தன், ம. சந்திரகுமார், இ. விஜிதரன், செ. ரம்யராகுலன். லோ. சுவேந்திரா, வ. மனோராஜ், செ. தர்சிகா, கா. பிரசாந்த், தி. தேவானந், தெ. இந்திரகுமார், ஜே. அன்ரன் பிறின்ஸ், தெ. இந்துகன், மெ. லாவண்யா, சி. ஜெயந்தினி, சு. பார்த்தீபன், சி. கிருஷாந்தினி, த. பிரபு, க. நித்தியானந்தன், கோ. பொபிநாதன், சி. சிவச்செல்வம், அ. ஜெனற் நிலானி, ஆ. ஜசோதன், கு. அகிலதீபன், சோ. தேவநாதன், செ. சஞ்சஜன், க. சுகந்தன், கெ. பகீரதன், இ. ராகுலன், சோ. ஹரிதரன், க. திலீபன், வெ. பிரதீபன், டொ. பரீடா, வி. பாலகிருஷ்ணன், கா. பிரணவன், சி. தினேஸ்குமார், டே. அடில் டிலிந்தன், பி. அகல்யா

(ஓ-6)

# கிழக்கு மாகாண இளைஞன் விடுதலை கோரி அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

(கொழும்பு)


கிழக்கு மாகாணத்தில் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதி ஒருவரின் விடுதலையைக் கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மூத்த சட்டத்தரணி அப்பாத்துரை விநாயக மூர்த்தி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய் யப்பட்ட பாலசுப்பிரமணியம் திலீ பன் (வயது 24) என்பவரின் விடுதலையைக் கோரி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் குறித்த இளைஞன் சட்ட விரோதமாக கைது செய்யப்பட்டார் எனவும் சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்மனுவில் பயங்கரவாத புலனாய்வு பிரி வுப் பொறுப்பதிகாரி, பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(ஓ-6)




யாழ்ப்பாண றோட்டரிக் கழகத்தால் நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களிற்கான உயர்தர, சாதாரண தரப் பரீட்சை வழிகாட்டல் புத்தகங்கள், உடுபுடவைகள் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

*26.06.2009*
*(ஆனி 12, வெள்ளிக்கிழமை)*
*சதுர்த்தி மாலை 4.40 மணிவரை*
*ஆயிலியம் முன்னிரவு 6.40 மணிவரை*
*இராகுகாலம் 10.25-11.55 மணிவரை*
*சுபநேரம் 5.55-7.25மணிவரை*
*சதுர்த்தி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | நல்ல தகவல் கிடைக்கும், ரோக பயம், புத்தி சாதுரியம், நல்ல முயற்சி. |
| இடபம் | கூட்டு முயற்சி, மாதர் நட்பு, மனோ தைரியம், தெய்வதரிசனம். |
| மிதுனம் | கற்பனை மிகுதி, அதிக செலவு, போசன சுகக்குறைவு, கௌரவக் குறைவு. |
| கடகம் | தெய்வதரிசனம், வெகுமானம், மாதர் நட்பு, புதிய முயற்சி. |
| சிங்கம் | குடும்பக்கவலை, சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், வீண் அலைச்சல். |
| கன்னி | ஆனந்தம், தெய்வதரிசனம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பாராட்டு, போசன சுகம், தெய்வ தரிசனம். |
| விருச்சிகம் | உத்தியோக பங்கம், இடமாற்றம், கட்டுப்பாடு, ஆரோக்கியக் குறைவு. |
| தனுசு | மனக்கவலை, ஆரோக்கியக் குறைவு, பொருள் விரயம், வேலைச் சுமை. |
| மகரம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, செய்தொழில் முன்னேற்றம், குடும்ப மகிழ்ச்சி, தனலாபம். |
| கும்பம் | தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், தொழில் முன்னேற்றம், சுவாரஸ்யம். |
| மீனம் | அஜீரண ரோகம், புத்திரரால் கவலை, அதிக பிரயாசை, பணக் குறைவு. |

**வளவன்**

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 40 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 350 | 400 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 70 |
| கோவா | -- | -- | -- |
| கரட் | 80 | 110 | 120 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 70 | 70 |
| சின்ன வெங்காயம் | 50 | 60-70 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 35-40 | 50-60 | 70 |
| கரணைக் கிழங்கு | 80 | 100 | -- |
| பயிற்றங்காய் | 90 | 100 | 60 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 60 | 70 | 60 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 500 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 120 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 20-25 |

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூலை மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத்திரு விழாவும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. ஏனைய நாட்களில் தினமும் வசந்த் மண்டபப் பூசை காலை11 மணிக்கும் மாலை 5 மணிக்கும் நடைபெறும். (ஓ)

✠✠✠

(சாவகச்சேரி

அல்லாரை அறுகம்புலம் மஹா கணபதி பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் யூலை மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு தீர்த்தத் திருவிழாவுடன் மஹோற்சவம் நிறைவெய்துமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-29)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 10,11க்கு சைவசமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவசமய பாடச் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெற உள்ளதெனவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளும்படியும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (ஓ-29)

# கைது செய்யப்பட்ட குருநகர் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்

குருநகர் பகுதியிலிருந்து கடந்த 5ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இயந்திரக் கோளாறு காரணத்தால் " பெரிய வேலி" என்னும் இடத்திற்கு சென்றடைந்த போது, பாதுகாப்புப் படையினரல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். யேம்ஸ் பிரான்சீஸ் (வயது 39), சோதிபாலா (வயது 59), அந்தோனிப்பிள்ளை குயின்ரஸ் வயது (45), ஏ.யேசுதாசன் (வயது 30) ஆகிய மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் கடந்த 23 ஆம் திகதி மன்னார் நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு உட்படுத்தி, சொந்த இடங்களுக்குச் செல்லுமாறு விடுதலை செய்ய்ப்பட்டுள்ளார்கள்.

தொழிலாளியான யேம்ஸ் பிரான்சீஸ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தம்மை நல்ல முறையில் கவனித்ததாகவும், ஏற்ற உதவிகள் புரிந்து தொழில் உபகரணங்களையும் பாதுகாத்து தம்மிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவித்தார். (ஓ-39)

## மாணிக்கவாசகர் குருபூசை

பருத்தித்துறை,தம்பசிட்டி நாவல் கலட்டிப் பகுதியில் வீற்றிருக்கும் காமாட்சி அம்மன் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 6 மணியளவில் அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி பொ. இரட்ணசோதியின் அனுசரணையுடன் மாணிக்கவாசகர் குருபூசை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 6 மணிக்கு திருவாசக முற்றோதல் ஆரம்பித்து நண்பகல் ஒரு மணியளவில் நிறைவு பெறவுள்ளது. (ஓ)

## செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

வலிகாமக் கல்வி வலயப் பாடசாலைகளில் சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியிலும் நடை பெறுவதாக இருந்தது:

இவை தவிர்கக முடியாத காரணத்தி னால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், இச் செயலமர்வு நடக்கவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப் படும் எனவும் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)




## வருடாந்த விளையாட்டுவிழா

இக்ரஃ முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 83, நாவலர் வீதியில் அமைந்துள்ள இக்ரஃ முன்பள்ளி வளாகத்தில் மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி பி.ஏ.எஸ். சுபியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லீட்ஸ் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட அதிகாரி ஜேசன் ஜெ.செல்வராசா, கௌரவ விருந்தினர்களாக ஒஸ்மானியாக் கல்லூரி உப அதிபர் மகேந்திர ராஜா, யாழ். சமுர்த்தி மகாசங்கத்தலைவர் ப.சிறிபால கிருஷ்ணன் (J/87) கிராமசேவையாளர் எஸ்.ரவிந்திரதாஸ் சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி இணைப்பாளர் செல்வி கார்த்தியாஜினி,குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் திருமதி தேரசெல்வி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6)

## வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மைதானத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி.நாகரத்தினம், கௌரவ விருந்தினராக கோப்பாய் ஐங்கரன் வெதுப்பக உரிமையாளர் ஆர்.பொன்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-6)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் "கடலுணவுகளைப் பாதுகாத்தலும் பதனிடலும் "எனும் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் சம்மேளனத் தலைவர் அ. எமினியாம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய முன்னாள் பணிப்பாளர் பேராசிரியர் கா.சித்திரவடிவேல் கலந்துசிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளரும் விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி சிவசாந்தினி குகநாதன் மற்றும் சிறப்பு விருந்தினராக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம், கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம் பிள்ளை ஆகியோர் கலந்துகொள்வர்.


நூல் ஆய்வுரையை கௌரவ விருந்தினர் நிகழ்த்தவுள்ளதுடன் முதற்பிரதியை யாழ்.ப.நோ.கூ.சங்க தலைவர் ப.கிரிதரன் பெற்றுக் கொள்வார்.

அத்துடன் நிகழ்வில் ஏற்புரையை நூல் ஆசிரியர் செல்வி வாசுகி பொன்னுத்துரை வழங்கவுள்ளார். (ஓ-4)

## சாதாரணதர மாணவர்களுக்கான கணித பாட கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாடகருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிரதேச பாடசாலைகளில் நடைபெறும் என்று கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)






பொது மக்களின் நலன்கருதி புறாப்பொறுக்கி ஆலடிச் சந்தியில் சிங்கறெஜிமென்ற் இன் 3 ஆவது படையணியால் நிர்மாணிக்கப்பட்ட பஸ் தரிப்பு நிலையத்தையும் அதனை கட்டளைத் தளபதி திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

## காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச ஆதார வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் நிலவுவதாக நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாததுடன் அத்தியாவசிய மருந்துப் பொருட்களும், மருத்துவப் பொருட்களும் முற்றாக தீர்ந்துபோயுள்ளது. கடந்த 23ஆம் திகதி மாலை வரை குறித்த மருந்துப் பொருட்கள் யாழ்.சுகாதார பணிமனையில் இருந்து கிடைக்கப் பெறாமையினால் பிறிற்றோன், பிரிட்னிசோன் போன்ற மருந்துகள் வெளிக்கடையில் வாங்க வேண்டியுள்ளது. அத்துடன் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் நீர் வசதிகள் குறைவாகவே உள்ளது என்றும் குழாய்கள் சேதமடைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். (ஓ-246)

## உயர்தர மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கரவை ஒன்றிய வெளிநாட்டுக் கிளையின் அனுசரணையுடன் கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் கலைப்பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு தமிழ்த்துறை விரிவுரையாளர்களான ஈ.குமரன், த.அஜந்தகுமார் ஆகியோரால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-6)

## தேசிய கல்வி நிறுவக இரண்டாம் வருட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக இரண்டாம் வருட பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் அனைவரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஒப்படைகள், செயற்றிட்டம், பரீட்சைக் கட்டணங்கள் ஆகியவற்றுடன் தவறாது நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளரும் பிராந்திய இணைப்பாளருமாகிய திருமதி த.வில்வ நாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன் அன்றையதினம் பரீட்சைக் கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)


## கருத்தரங்கு

(இருபாலை)

செங்குந்தா இந்துக்கல்லூரி மாணவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் வளவாளர் ச.சுசீகரனால் நடத்தப்படவுள்ளது. (ஓ-136)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 21 ✸ 03 ✸ 1972



விண்ணில் 27 ✸ 05 ✸ 2009

அமரர்

சிவனேஸ்வரன் கருணாதரன்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 26.06.2009 இன்று (வெள்ளிக்கிழமை)அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

சத்திரங்கை,
கம்பர் மலை,
உடுப்பிட்டி வடக்கு.

குடும்பத்தினர்
(தாய் )சுந்தரவதனா
(மாமா) சர்வானந்தன்

(2847)

# க.பொ.த.(உ/த) த்தில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள்

(கொழும்பு)

2009ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி புலமைப்பரிசில்பெறுவதற்கு தகைமையுடைய மாணவர்களை தெரிவுசெய்வதற்கான விண்ணப்ப படிவங்கள் மற்றும் தகவல்கள் என்பன சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சின் பாடசாலைகள் நடவடிக்கை பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அப்பிரிவின் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் க.பொ.த உயர்தர பரீட்சையில் அதி திறமை காட்டும் 100 பேர் தெரிவு செய்யப்பட்டு மாதம் தோறும்அவர்களுக்கு தலா 1500 ரூபா வீதம் இப்புலமைப்பரிசில் இலங்கை இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கிடையே 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அதி திறமை பெறுபேறுகளை பெற்றுக்கொண்டவர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்ப படிவங்கள் பாடசாலைகளுக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

திறமை சித்தி பெற்ற நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்கள் ஒருமாவட்டத்தில் இருந்துநான்கு பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இதேவேளை 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதர பரீட்சையில் அகில இலங்கை ரீதியிலும் மாவட்ட மட்டத்திலும் அதிக திறமையை காட்டிய மாணவர் களுக்கு க.பொ.த உயர்தரம் கற்பதற்காக புலமைப்பரிசில் வழங்குவதற்கு ''டயலொக் டெலிக்கொம் லிமிட்டெட்'' முன்வந்துள்ளது.

இப்புலமைப்பரிசில் வழங்குவதற்காக தகைமையுடைய மாணவர்களை தெரிவுசெய்யுமாறு இந் நிறுவனம் கல்வியமைச்சிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதன்பிரகாரம் 2008 க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை மாணவர்களுக்கு அதிக திறமை காட்டி 2009/2011 கல்வி யாண்டில் க.பொ.த உயர்தர பௌதீக விஞ்ஞானம், கணித பாடத்து றையைச் சேர்ந்த ஐந்து பேர் அகில இலங்கை ரீதியாகவும் மாவட்ட மட்டத்தில் இருந்து ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 25 பேரும் இப்புலமைப்பரிசில்பெற தெரிவுசெய்யப்படவுள்ளனர். (ஓ-6)

# முகாம்களிலுள்ள மக்களை பார்வையிடுவதற்கான ஐ.தே.க.வின் கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்டும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களை பார்வையிடுவதற்காக கோரிக்கை விடுத்துள்ள ஐ.தே.க. எம்.பி.க்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்டும். ஏனெனில், இவர்கள் அனைவரும் புலிகளின் ஆதரவாளர்கள், அத்தோடு முகாம்களுக்குச் சென்று பிரச்சினைகளை உருவாக்கி மீண்டும் எமது நாட்டுக்குள் சர்வதேச சதிகாரர்களை தலையிடச் செய்வதே இவர்களின் நோக்கமாகும் என விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை அசைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. மக்களின் ஆதரவு பெருகி வருகிறது.

இதேவேளை எமக்கெதிரான சர்வதேச சதிகாரர்களும் எமது படைத் தளபதிகளை யுத்த நீதிமன்றத்தில் நிறுத்த முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே, தேர்தல்களில் வெற்றி பெற முடியாது என்பதை புரிந்து கொண்ட ஐ.தே.கட்சியில் உள்ள புலி ஆதரவாளர்கள் இன்று இடைத்தங்கல் முகாம்களில் தமிழ் மக்களை தமது அரசியலுக்காக பயன்படுத்த முயற்சிக்கின்றனர்.

அதற்காகவே இம்முகாம்களுக்கு செல்ல வேண்டுமென பல்வேறு தரப்புக்கள் ஊடாக முயற்சி செய்கின்றனர். இதற்கு இடமளித்தால் முகாம்களில் மக்களை பார்வையிடுவதாகக் கூறிக்கொண்டு அங்கு சென்று பிரச்சினைகளை ஏற்படுத்தி அதனை சர்வதேச ரீதியாக பிரசாரப்படுத்துவார்கள்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் சர்வதேச சதிகாரர்களை மீண்டும் எமது நாட்டுப் பிரச்சி னைக்குள் தலையிடச் செய்வதே இவர்களது நோக்கமாகும். எனவே இவர்களுக்கு ஒருபோதும் அனுமதி வழங்க கூடாதென்றும் விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார். (ஓ-6)

# பத்திரிகை பேரவைச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஊடக அமைப்புகள் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை பத்திரிகைப் பேரவை சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பது தொடர்பாக ஊடக அமைப்புக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவதானது ஊடகவியலாளர்களை சிறைக்குள் தள்ளும் அதிகாரத்தை வழங்குவதாக அமையுமென இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் உட்பட 8 அமைப்புகள் தெரிவித்துள்ளன.

1973 ஆம் ஆண்டு பத்திரிகைப் பேரவைச் சட்டம் இலக்கம் 5ஜ மீண்டும் செயற்பாட்டிற்கு கொண்டு வர ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாகவும் இதனையிட்டு ஊடக அமைப்புகள் கவலையடைந்திருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடுதல் மற்றும் பத்திரிகையாளர்களுக்கும் பிரசுரிப்பாளர்களுக்கும் சிறைத்தண்டனை வழங்கும் அதிகாரங்கள் இருப்பதாகவும் ஊடக அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் அவர்கள் மீது தண்டம் அறவிடுதல் அல்லது அவர்களை சிறைக்கு அனுப்புதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாக ஊடக கலாசாரம் அமைய முடியாதென சுட்டிக்காட்டியிருக்கும் ஊடக அமைப்புகள் இதற்குப் பதிலாக நவீன உலகமானது சுய ஒழுங்கமைப்புப் பொறி முறையை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டமானது சர்ச்சைக்குரிய வரலாற்றைக் கொண்டிருப்பதுடன் இது ஊடகவியலாளர்களையும் பிரசுரிப்பாளர்களையும் சிறைக்கு அனுப்பக்கூடிய அதிகாரத்தை கொண்டிருப்பதாகவும் ஊடக அமைப்புகள் கூறியுள்ளன. (ஓ-6)


## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றேன்



திரு கந்தையா தவதாசன்

(சித்திரபாட ஆசிரியர்)

(யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி புத்தூர்)

யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் மைந்தனாக அக் கல்லூரியில் கற்று பின் அதே கல்லூரியில் தொடர்ந்து முப்பத்தி மூன்று ஆண்டுகள் ஆசிரியராகச் சேவையாற்றி அகவை அறுபதில் மணி விழாக் காணும் நாயகனை வாழ்த்துவதோடு ஓய்வு காலத்தில் பல நலன்களையும் பெற்று வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



நண்பன்

சு.மோகனராஜன்

அதிபர்

யா/ பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தி

அச்சுவேலி. (2847)


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## நான்காம் நாள்

### அருளாட்சி செய்திடம்மா

நீலக்கடல் நடுவினிலே
நீந்துகின்ற நயினையிலே
செந்தூரம் வீசிவர
செழிப்பாகக் காட்சிதரும்
செந்தணலின் ஒளிப்பிளம்பே
சிந்துகின்ற அருள் சுடரே – அம்மா
அன்புடனே பக்தர் எம்மை
அருளாட்சி செய்திடம்மா

தென்கோவையூர் - ம. கஜேந்தினி

### மங்களமாய் வலம் வருவாய்

அலைகடலின் ஓசையிலே
ஆனந்தமாய் துயிலுறங்கும்
அன்னையே நயினை நாக பூஷணியே
இருளகன்று ஒளிவீச
இன்ப வாழ்வுதனைக் காண
மங்களமாய் வலம் வருவாய்
மக்கள் மனம் மகிழ்ந்திடவே!

ம. நிரோஷனா
கோப்பாய்.

### ஞான்றும் அருள்புரிவாயே

நயினையில் வீற்றிருந்து நமையாளும் – தாயே
நலன்கள் பல ஈந்து நமைக் காத்தருள்வாயே
துலங்கும் தூய தமிழ் தாயும் – நீயே
கலங்கும் மனங்களை கணமும் அரவணைப்பாயே
காலமெல்லாம் கருணை மழை பொழிபவளே
ஞாலமது ஈடேற ஞான்றும் அருள்புரிவாயே

க. நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

### மனதினிலே நிறைந்தவளாம் நாகபூஷணி

நயினையிலே வீற்றிருக்கும் நாகபூஷணி
மக்கள் நலன் காக்கும் அன்னையவள் நாகபூஷணி
கேட்டபடி வரும் அருள்வாள் நாகபூஷணி
எங்கள் குறைகள் எல்லாம் தீர்த்திடுவாள் நாகபூஷணி
கடல் சூழ வீற்றிருக்கும் நாகபூஷணி
நாக பாம்பினிலே அமர்ந்திருப்பாள் நாகபூஷணி
பாரெல்லாம் புகழ் பூத்த நாகபூஷணி
மக்கள் மனதினிலே நிறைந்தவளாம் நாகபூஷணி

செ. கண்மணி
யாழ்ப்பாணம்.

### நலம் தந்து காப்பாய் அம்மா

வாடுகின்றோம் வருந்துகின்றோம் வழியறியோம்
வகையறியோம்
தேடுகின்றோம் உறவினரைத் திசைகளாக ஓடுகின்றோம்
நடுக்கடலில் கைவிட்டார் படகுபோல் ஆகிவிட்டோம்
நெடுந்தூரம் தாம்நினைந்து நெஞ்சமும் புண்ணாகி
விட்டோம்
படுந்துயரைப் போக்கிடுவாய் பராசக்தி தாயே நீயே!
தேடுவினை தொலைத்திடம்மா தேவியே நயினைத்தாயே
கூடுமடியார் குறை தீர்ப்பாய் குணக்குன்றே குமரியாளே
நாடுகின்றோம் உன்நிழலை நலந்தந்து காப்பாய் அம்மா

திருமதி. மா. வேதநாதன்
கொக்குவில்.

# றோயல் கல்லூரி, கொழும்பு -7

## கல்வி பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை –2009
## வழிகாட்டல் பரீட்சை

**கணக்கீடு -II -I Accounting-II** 1 மணித்தியாலம் 1 Hour

18. பின்வருவனவற்றுள் மிகச்சரியான மேந்தலை உள்ளடக்க விகிதமாக அமைவது,

1. பாதிடப்பட்ட நேர் ஊழியமணித்தியாலங்கள் / பாதிடப்பட்ட மேந்தலை கிரயம்
2. உண்மை நேர் ஊழிய மணித்தியாலங்கள் / பாதிடப்பட்ட மேந்தலை கிரயங்கள்
3. பாதிடப்பட்ட மேந்தலை கிரயங்கள் / பாதிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலங்கள்
4. உண்மை மேந்தலை செலவு / உண்மை நேர் ஊழிய மணித்தியாலங்கள்
5. பாதிடப்பட் மேந்தலை கிரயங்கள் / உண்மை நேர்ஊழிய மணித்தியாலங்கள்

19. ஒதுக்கீடு செய்யப்படாத மேந்தலை கிரயங்களை உற்பத்தி சேவை திணைக்களங்களுக்கு பகிர்வு செய்தல் குறிப்பிடுவது,
1.மேந்தலை மீள பங்கீடு 2. மேந்தலை பங்கீடு
3.மேந்தலை ஒதுக்குதல் 3. மேந்தலை திரட்டுதல்
4.மேந்தலை பகுப்பாய்வு

20. சாதாரண பங்கொன்றின் சந்தைப்பெறுமதி ரூபா 14, பங்கொன்றின் உழைப்பு ரூபா 4, பங்கொன்றிற்கான பங்கிலாபம் ரூபா 2, விலை உழைப்பு விகிதமும், பங்கிலாப காப்பு விகிதமும் முறையே,
1. 1ம் 3.5 தடவைகள் 2. 4ம் 3.5 தடவைகள்
2. 3,5ம் 1தடவைகள் 4. 7ம் 1 தடவைகள்
5. 3.5ம் 7தடவைகள்

**வினா இலக்கம் 21 தொடக்கம் 30 வரையானவற்றுக்கு சுருக்கமான விடையளிக்குக.**

21. ஒதுக்கங்கள், ஏற்பாடுகள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை குறிப்பிடுக.
ஒதுக்கங்கள் ஏற்பாடுகள்
.............................. ..............................
.............................. ..............................

22. இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமங்களுக்கான சட்டம் 1995,15ம் பிரிவு என்பவற்றுக்கமைய இலங்கை கணக்கீடுக்கும், கணக்காய்வுக்கும் எந் நிறுவனம் பொறுப்பானது

23. உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று தயாரிக்கப்படுவதன் பிரதான நோக்கத்தினை குறிப்பிடுக.

24. பந்தாய அட்டையொன்றில் உள்ளடங்கியிருக்கும் 04 உருப்படிகளை தருக.
i.............................. ii..............................
iii.............................. iv..............................

25. இலாபநட்டமற்ற புள்ளியிலான உற்பத்தி அலகுகளை குறைக்கக்கூடிய இரு உபாயங்களை குறிப்பிடுக.

26. சம்பளப்பட்டியலை தயாரிப்பதற்கான 4 மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.
i.............................. ii..............................
ii.............................. iv..............................

27. இலங்கை கணக்கீட்டு நியமம் 9இற் கிணங்க செயற்பாட்டு நடவடிக்கை என்பதனை விபரிக்க.


28. நிறுவனமொன்றின் குறுங்கால, நீண்டகால கடன்தீர்க்கும் ஆற்றலினை மதிப்பிடக்கூடிய இரு விகிதத்தினை ஒவ்வொன்றுக்கும் குறிப்பிடுக.
i. குறுங்கால கடன்தீர்க்கும் விகிதம் ..............................
ii. நீண்டகால கடன் தீர்க்கும் விகிதம் ..............................

29. இலங்கை கணக்கீட்டு நியமம் -10 இன்படி "மதிப்பீடுகளிலான மாற்றங்கள்" என்பவற்றை வரையறுக்க.

30. இலங்கை கணக்கீட்டு நியமம் -05 இன்படி இருப்புக்களை மதிப்பீடுவதற்கான அடிப்படை விதியினை குறிப்பிடுக.

31. சாதாரண பங்குகளுக்கும், முன்னுரிமை பங்குகளுக்குமிடையிலான ஒற்றுமையொன்றினையும், வேற்றுமையொன்றினையும் குறிப்பிடுக.
i.ஒற்றுமை :..............................
ii.வேற்றுமை ..............................


32. கீழ்வரும் இலாபநட்டமற்ற புள்ளிவரைபில் A,B,C,D என்பன குறிப்பது யாவை?




i.A -
ii.B-
iii.C-
iv.D-

33. பணத்திற்கு காலப்பெறுமதி உண்டு என்பதற்கு 2 காரணங்கள் தருக.

34. கீழ்வரும் வரைபடம் இருப்பு அசைவு பற்றியதாகும். "Y","Z" என்பவைகள் குறிப்பிடுவது யாது?




"Y" ..............................
"Z" ..............................

35. பிற்போடப்பட்ட வருமான செலவுக்கு இரு உதாரணங்கள் தருக?
i
ii

**36 தொடக்கம் 40 வரையான கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் எனக்குறிப்பிடின் போதுமானது.**

36. மொத்த மாறும் கிரயம், அலகொன்றின் மாறும் கிரயம் இவ்விரண்டும் உற்பத்திமட்டம் அதிகரித்த போதும் மாறாதிருக்கும் ( )

37. இலங்கை கணக்கீட்டு நியமம் அனுமதித்தாலன்றி வருமானங்களுக் கெதிராக செலவினங்களையோ அல்லது சொத்துக்கெதிராக பொறுப்புக் களையோ எதிர்தீர்த்தல் செய்தல் கூடாது. ( )

38. எல்லா நேர்க்கிரயங்களும்மாறும் கிரயங்களாகும் ( )

39. இறுதிவந்தது முதல் வெளியேறல் முறையானது நடைமுறை கிரயங்களை, நடைமுறை வருமானத்துடன் ஒப்பீடு செய்கிறது ( )

40. இலாபநட்டமற்ற புள்ளி ஆய்வில் ஒரேயொரு எடுகோளே காணப்படுகிறது. ( )

**கணக்கீடு -II -II Accounting-II -II**
**2 மணித்தியாலங்கள் 2 Hours**

அறிவுறுத்தல்கள்:முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

01) எலக்ட்ரோ லங்கா லிமிடெட்டின் 2009 மார்ச் 31 இல் உள்ளபடியான பரீட்சை மீதி வருமாறு,

| விபரம் | (000) வரவு | (000) செலவு |
|---|---|---|
| 100000 சாதாரண பங்குகள் | | 4000 |
| 100000 முன்னுரிமை பங்குகள் (பங்கொன்று ரூபா 4/-பங்கிலாபம் பெறுபவை | | 2000 |
| இலாபநட்ட கணக்கு(2007/08) | | 895 |
| பொது ஒதுக்கீடு | | 385 |
| கொள்வனவுகள் | 3890 | |
| விற்பனைகள் | | 7120 |
| விற்பனை திருப்பங்கள் | 115 | |
| கொள்வனவு திருப்பங்கள் | | 126 |
| செலுத்திய உள்வந்த வண்டிக்கூலி | 155 | |
| கையிருப்புக்கள் (01.04.2008) இல் | 396 | |
| காணி-கிரயத்தில் | 2000 | |
| கட்டிடம்-கிரயத்தில் | 3200 | |
| அலுவலக உபகரணம் | 800 | |
| திரண்டதேய்வு (01.04.2008) வரை-கட்டடம் | | 480 |
| அலுவலக உபகரணம் | | 300 |
| வியாபார கடன்படுனர் | 834 | |
| வியாபார கடன்கொடுனர் | | 283 |
| வருமானவரி ஏற்பாடு (2007/08) | | 136 |
| செலுத்திய வருமானவரி (2007/08) | 120 | |
| செலுத்திய வருமானவரி (2008/09) | 390 | |
| செலுத்திய இடைக்கால பங்கிலாபம் -சாதாரணபங்கு | 200 | |
| -முன்னுரிமை பங்கு | 200 | |
| தாபன நிர்வாக செலவுகள் | 1088 | |
| வங்கி கட்டணமும், காசோலை புத்தக கட்டணமும் | 45 | |
| செலுத்திய திபெஞ்சர் வட்டி | 40 | |
| 18% சதவீத திபெஞ்சர்கள் | | 300 |
| பெற்ற வாடகை வருமானம் | | 240 |
| பிறவருமானங்கள் | | 85 |
| காசு வங்கிமீதி | 1981 | |
| | 16350 | 16350 |

பின்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

01)2009மார்ச் 31 இல் கையிருப்புக்களின் பெறுமதி ரூபா 540000
02)தாபனநிர்வாக செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்
இயக்குனர் வேதனம் ரூபா 180000
கணக்காய்வு கட்டணம் ரூபா 30000
03)(2008/09) ம் ஆண்டிற்கு மதிப்பிடப்பட்ட வருமானவரி ரூபா 520000
04)ஆதனம், பொறி உபகரணம்

கம்பனியின் பெறுமானத்தேய்விடல் கொள்கையானது கொள்வனவு செய்த ஆண்டில் பெறுமானத் தேய்வு தாக்கம் செய்வதில்லை என்பதுடன், முடிவுறுத்தல் செய்யப்படுமாயின் முழு வருடத்திற்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வினை தாக்கல் செய்வதுமாகும்.

கட்டடம் 10% சதவீதம்
அலுவலக உபகரணம் 20% சதவீதம்

- 20009.01.01.இல் கட்டடமொன்று ரூபா 200000ற்கு புதிதாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.*
- 2004/05கணகாண்டில் ரூபா200000ற்கு கொள்வனவு செய்த அலுவலக உபகரணமொன்று நடப்பாண்டில் ரூபா 85000ற்கு விற்பனை செய்யப் பட்டது. விற்பனையால் பெற்ற பணம் பிறவருமான கணக்கில் செலவு வைத்ததை தவிர வேறுசீராக்கம் இடம்பெறவில்லை.
- இதனைத் தவிர வேறு ஆதனம் பொறி உபகரணங்கள் கொள்வனவோ அல்லது அகற்றல்கலோ இடம்பெறவில்லை.

05.இயக்குநர் பிரேரணைகள் வருமாறு,
i.பொது ஒதுக்கத்திற்கு ரூபா 100000 மாற்றல்
ii.முன்னுரிமை பங்குதாரருக்கு உரிய நிலுவை பங்கிலாபத்தை வழங்கல்
iii.சாதாரண பங்குதாரர் கொண்டிருக்கும் ஒவ்வொரு 10 பங்கிற்கும் 01 பங்கினை உபகாரபங்காக வழங்கல்

**தேவைப்படுவது**
i) 2009. மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான எலக்ட்றோ கம்பனி லிமிட்டெட்டின் வருமான கூற்று.
ii). 2009 மார்ச் 31 இல் முடிவுற்ற தினத்தில் உள்ளபடியான ஐந்தொகையும், உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று
iii) பொருண்மைவாய்ந்த குறிப்புகள்

(20புள்ளிகள்)

02. குமுது லிமிட்டெட் 100000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூபா 20/- படி விற்பனை செய்தது. பணம் பின்வருமாறு வசூலிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பம் | ரூபா | 5/= |
| ஒதுக்கல் | | 7/= |
| அழைப்பு | | 8/= |
| | | 20/= |

150000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இயக்குனர்கள் விகிதசம அடிப்படையில் பங்குகள் ஒதுக்கினர்.
பின்வருவோர் தவிர்ந்த ஏனைய அனைத்து விண்ணப்பதாரிகளிடமும் பணம் வசூலக்கப்பட்டது. திரு.ராஜா தான் விண்ணப்பித்த 12000 பங்குகளுக் கான ஒதுக்கல், அழைப்பு பணத்தினை செலுத்தவில்லை. திரு ரவி தான் விண்ணப்பிதத 6000 பங்குகளுக்கான அழைப்பு பணத்தை செலுத்தவில்லை இயக்குனர்கள் நிலுவைத்தொகைக்கு வட்டிதாக்கல் செய்வதில்லை என தீர்மானித்தனர். நிலுவையாயுள்ள பங்குகள் பங்கொன்று ரூபா 25/= படி மீள் விற்பனை செய்யப்பட்டு பெற்ற பணத்திலிருந்து திரு ராஜா, ரவி ஆகியோருக்குரிய பணம் மீளளிக்கப்பட்டது.

**தேவைப்படுவது**
1. மேற்கூறப்பட்ட பங்குவழங்கலுக்கான நாட்குறிப்பு பதிவுகள் (காசு உட்பட)

(10 புள்ளிகள்)

03.மென்டிஸ் லிமிட்டெட்டின் 2008 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருகைக் கூற்று

| i) வருமான கூற்று | ரூபா (000) |
|---|---|
| விற்பனைகள் (அனைத்தும் கடன்விற்பனைகள்) | 2150 |
| கழிவு: விற்பனை கிரயம் | (1334) |
| மொத்த இலாபம் | 816 |
| கூட்டு: முதலீட்டு வருமானம் | 36 |
| கழி:-செலவினங்கள் | 852 |
| செயற்பாட்டு செலவினங்கள் (பெறுமானதேய்வு உள்ளடங்கலாக) | (516) |
| கழி: வட்டிச் செலவு | (24) |
| வருமானவரிக்கு முன் தேறிய இலாபம் | 312 |
| கழி:-வருமானவரி | (32) |
| வருமானவரிக்கு பின் தேறிய இலாபம் | 280 |

ii)ஐந்தொகைகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

| | 2007.03.31 | 2008.03.31 |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | ரூபா 500000 | 650000 |
| ஆதனம் பொறி உபகரணம் -கிரயம் | 700000 | 830000 |
| திரண்டதேய்வு | 300000 | 360000 |
| வியாபார கையிருப்பு | 155000 | 166000 |
| வியாபார கடன்படுனர் | 126000 | 148000 |
| வியபார கடன்கொடுனர் | 135000 | 183000 |
| அட்டுறு வட்டிச்செலவு | 10000 | 8000 |
| வருமானவரி ஏற்பாடு | 12000 | 15000 |
| வருமதி முதலீட்டு வருமானம் | - | 3000 |
| காசுமீதி | (24000) | 349000 |

**தேவைப்படுவது,**
1) 2008 மாார்ச் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல்கூற்று, (நேர்முறையில்) (10புள்ளிகள்)

04)அ)தொழிற்சாலையொன்றிற்கு மாதாந்த மூலப்பொருள் தேவை 1500 அலகு கள், அலகொன்றின் விலை ரூபா 27, கட்டளையொன்றிற்கான கிரயம் ரூபா 150, பாதுகாப்பு கிரயம் இருப்பின் பெறுமதியில் 20% சதவீதம்,
தேவைப்படுவது,
i) சிக்கனக்கட்டளை தொகை
ii) ஆண்டுக்கான கட்டளைகளின் எண்ணிக்கை

(2 புள்ளிகள்)

ஆ) பின்வரும் தரவுகளிலிருந்து பின்வரும் கையிருப்பு மட்டங்களை கணிக்க.
i) மறுகட்டளை மட்டம்
ii) ஆகக்கூடிய இருப்புமட்டம்
iii) இழிவு இருப்புமட்டம்

மறுகட்டளைத் தொகை 1500 அலகுகள்
மறுகட்டளைக் காலம் 04 தொடக்கம் 06 வாரங்கள்
ஆகக்கூடிய நுகர்வு 400 அலகுகள்
இழிவு நுகர்வு 200 அலகுகள்

(03 புள்ளிகள்)

இ) ராஜ் உற்பத்தி ஸ்தாபனம் இருப்பு பெறுமதியிடுவதற்கு முதல்வந்த முதல் வெளியேறல் முறையினை கடைப்பிடிக்கின்றது. இருப்பு இலக்கம் J-110 தொடர்பான ஆகஸ்ட் 2008 இன் முதல்வார கொடுக்கல் வாங்கல்,
ஆகஸ்ட் 01,கையிருப்புகள்1000 அலகுகள் பெறுமதி ரூபா 50000 ஆகும்
ஆகஸட் 02,பெறுவனவுகள் 300 அலகுகள் அலகொன்றுக்கு ரூபா60/= ஆகும்.
ஆகஸட்04,பெறுவனவுகள் 400 அலகுகள் அலகொன்றுக்கு ரூபா 70/= ஆகும
ஆகஸட்05,விநியோகம் 1500 அலகுகள் ஆகும்.
ஆகஸட் 06,பெறுவனவுகள் 800அலகுகள் அலகொன்றுக்கு ரூபா 65/=ஆகும.
ஆகஸ்ட்07,விநியோகம் 500 அலகுகள் ஆகும்

**தேவைப்படுவது,**
1)2008 முதல் வாரத்திற்கான களஞ்சியப்பேரேட்டினை தயாரித்து இறுதியிருப்பின் பெறுமதியைக்காண்க.

(10 புள்ளிகள்)

05) கீழ்வரும் தரவுகளை பயன்படுத்தி ஊழியர் ஒருவருக்கான கூலி.
அ) போனஸ் கொடுப்பனவு என்பவற்றை கணிக்க.
தொழில் ஆரம்பித்தமை:-2008 டிசெம்பர் 24, திங்கட்கிழமை காலை 8.00
தொழில் முடிந்தது:-2008 டிசெம்பர்29,சனிக்கிழமை மாலை 4.00
பூரணப்படுத்திய வெளியீடுகளின் எண்ணிக்கை:-638
பூரணப்படுத்தியவைகளில் அங்கீகரிக்கப்பட்டவை:-600
மணித்தியாலக்கூலி ரூபா 50
அனுமதிக்கப்பட்ட அலகுகள் 1 மணித்தியாலத்திற்கு 10 அலகுகள் சேமிக்கப பட்ட மணித்தியாலயத்திற்கு 50% போனஸ் வழங்கப்படும்.நாளொன்றுக்கான வேலை நேரம் 9 மணித்தியாலங்கள் மேலதிக நேரக்கூலி வழங்கப்படமாட்டாது.

(02 புள்ளிகள்)

ஆ) பாலு டிரேடர்ஸின் 2008 டிசெம்பர் மாத சம்பள விபரம் வருமாறு,

| ஊழியர் பெயர் | அடிப்படை சம்பளம் | படிகள் | மேலதிகநேர கொடுப்பனவு | சம்பள முற்பணம | கடன் அறவீடு |
|---|---|---|---|---|---|
| நிர்மல் | 24000 | 4000 | - | 10000 | 2000 |
| கவிந்து | 20000 | - | 1200 | 8000 | - |
| இந்திக | 18000 | - | 1000 | 4000 | 1000 |
| | 62000 | 4000 | 2200 | 22000 | 3000 |

**மேலதிக தகவல்கள்**
i) ஊழியர்கள் சேமலாபநிதியத்திற்கான தொழிலாளி பங்களிப்பு 8% சதவீதம், தொழில்தருனர் பங்களிப்பு 12% (படிகள்,மேலதிக) நேர கூலி என்பனEPF &ETE கணிப்பீட்டுக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

ii) கம்பனி வழக்கமாக குறித்த மாதச் சம்பளத்தினை தொடர்ந்து வரும் மாதத்தின் முதல் வாரத்தில் செலுத்தும்.
**தேவைப்படுவது,**

1) 2008 டிசெம்பர் மாதத்திற்கு பொருத்தமான நிரல்களுடன் சம்பளப்பட்டியல்.
2) டிசெம்பர் மாத சம்பளத்திற்கான நாட்குறிப்பு பதிவுகள்.

06) இசுறுகார்மென்ட்ஸ் இரு உற்பத்திப்பிரிவுகளையும், ஒரு சேவை பிரிவினையும் கொண்டது.கீழ்வரும் தகவல்கள் அதன் இரு உற்பத்திப்பொருள் தொடர்பானவை.

i)மதிப்பிட்ட மேந்தலை செலவுகளும், தொடர்பான அடிப்படைகளும்

| | | மொத்த மேந்தலைச்செலவு | நேர்ஊழிய மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| உற்பத்திபிரிவு | -A | ரூபா 76,200 | 720 |
| | -B | ரூபா 26,400 | 480 |
| சேவைபிரிவு | | ரூபா 15,000 | - |

ii) சேவை பிரிவின் மேந்தலைசெலவு பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும்.
உற்பத்திப் பிரிவு -A 20%
-B 80%

iii) இரு உற்பத்திப் பொருட்களினதும் பகுப்பாய்வு செய்யப்பட்ட உண்மைச்செலவு பின்வருமாறு,

| | சேர்ட் | சட்டை |
|---|---|---|
| நேர் மூலப்பொருள் | ரூபா 300.00 | ரூபா 350.00 |
| நேர் தயாரிப்புக்கூலி | ரூபா 200.00 | ரூபா 250.00 |

நேர் ஊழிய மணித்தியாலங்கள்

| | | | |
|---|---|---|---|
| உற்பத்திப் பிரிவு | -A | 1மணி | 2மணி |
| | -B | 2மணி | 1மணி |

iv) ஆலை மேந்தலைச் செலவு நேர்ஊழிய மணித்தியால அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றன.
**தேவைப்படுவது,**

1) உற்பத்தி அலகொன்றின் கிரயத்தை பின்வரும் அடிப்படையில் கணிக்க.
அ) உற்பத்தி பிரிவுகளை தனித்தனியே கருதுதல்.
ஆ) முழுதொழிற்சாலையினையும் ஒன்றாக கருதுதல் (10புள்ளிகள்)

(முற்றும்)

# புத்தம்புது வசதிகளுடன் விண்டோஸ் 7

முற்றிலும் புதியதொரு அனுபவத்தையும் கூடுதல் வசதிகளையும் கொண்டதாக விரைவில் விண்டோஸ் 7 நமக்குக் கிடைக்க இருக்கின்றது. தொடக்கத்தில் BlackComb, Vienna எனக் குறியீட்டுப் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அடுத்த ஒப்பரேட்டிங் சிஸ்டம் தொகுப்பு விண்டோஸ் 7 என்ற பெயரில் விரைவில் வெளிவர இருக்கிறது.

விண்டோஸ் 7 இறுதி சோதனைத் தொகுப்பினைப் பல்லாயிரக்கணக்கானவர்கள் டவுண்லோட் செய்து பயன்படுத்தித் தங்களுக்கேற்பட்ட அனுபவத்தினை மைக்ரோசொப்ட் நிறுவனத்துடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். விரைவில் இதன் முழுமையான பாதுகாப்பான பதிப்பினை மைக்ரோசொப்ட் அதிகாரபூர்வமாக வெளியிட இருக்கிறது. முதலில் சோதனை தொகுப்புகள் வெளிவந்தபோது இந்தப் புதிய பதிப்பு விஸ்டாவிற்கு மேக் அப் போட்டு வெளிவந்துள்ளது என்று பலர் எழுதி வந்தனர்.




ஆனால், தற்போது வந்துள்ள வெளியீட்டிற்கு முந்தைய பதிப்பினை டவுண்லோட் செய்து பயன்படுத்திப் பார்க்கையில் விண்டோஸ் 7 பல்வேறு முனைகளில் பயனாளர்களுக்குப் புதிய வசதிகளைத் தந்துள்ளது தெரியவந்துள்ளது. இதன் புதிய அம்சங்கள் இங்கே தரப்படுகின்றன.

### முற்றிலும் மாற்றப்பட்ட டாஸ்க் பார்

மோனிட்டர் திரையில் கீழாக நமக்கு டாஸ்க்பார் அமைகிறது. இதில் உள்ளகுயிக் லாஞ்ச் ரூல்பார் மாற்றப்பட்டுள்ளது. இதில் இயக்கப்படும் புரோகிராம்களின் டேப்கள் காட்டப்பட்டு அவற்றைக் கிளிக் செய்வதன் மூலம் நமக்கு அவை விரைவாகக் கிடைக்கின்றன. விண்டோஸ் 7 சிஸ்டம் டாக்ஸ்க் பாரில் நாம் எந்த புரோகிராமையும் பின் செய்து வைக்கலாம். அங்கு கிளிக் செய்து அவற்றை எளிதாகப்பெறலாம். புரோகிராம்களின் ஐகன்களை நம் இஷ்டப்படி இழுத்து எடுத்துவைக்கலாம். இவற்றைப் பெரிதாக்கி வைக்கலாம். இந்த ஐகன்களில் மவுஸின் கேர்சரைக் கொண்டு சென்றால் அந்த புரோகிராம்களில் திறந்திருக்கும் பைல்களின் சிறிய படக்காட்சி (தம்ப் நெயில் அளவில்) காட்டப்படும். அந்தப் படக்காட்சிகள் மீது கேர்சரைக் கொண்டு சென்றால் அந்த விண்டோவின் பிரிவியூ காட்சி கிடைக்கும். கேர்சரை அவற்றிலிருந்து நீக்கினால் அந்தக் காட்சி மறைந்துவிடும். வலது ஓரத்தில் உள்ள சிஸ்டம் கடிகாரம் அருகே ஒரு சிறிய கட்டடம் தரப்பட்டுள்ளது. இது Aero Peek என அழைக்கப்படுகிறது. இதன் அருகில் கேர்சரை கொண்டு சென்றால் டெஸ்க் டாப்பில் உள்ள புராகிராம்க ளின் விண்டோக்கள் அனைத் தும் ட்ரான்ஸ்பரண்ட்டாகக் காட்டப் படுகின்றன. நாம் நமக்குத் தேவையானதைக் கிளிக் செய்து பெற லாம். ஒருவிண்டோவின் மேலாகக் கிளிக் செய்தால் அது தானாக மக்ஸிமைஸ் ஆகிவிடும். மீண்டும் கிளிக் செய்தால் அனைத் தும் மினிமைஸ் செய்யப்பட்டு டெஸ்க்டாப் கிடைக்கும். இன்னும் ஒரு சிறப்பான செயல்பாடும் இந்த விண்டோக்களில் கிடைக்கிறது. இதனை ஷோர்ட்கட் கீகள் மூலம் மேற்கொள்ளலாம். மினிமைஸ் செய்யப்பட்டு விண்டோக்களில் மவுஸ் கேர்சரை வைத்து விண்டோஸ் கீயை யும் மேல் அம்புக் குறியையும் அழுத்தி னால் விண்டோ மக் ஸிமைஸ் ஆகும். கீழ் அம்புக்குறியை அழுத்தினால் விண் டோ மினிமைஸ் ஆகும். பக்கவாட்டில் உள்ள அம்புக் குறிகளை அழுத்தினால் இடது வலது என ஓரமாக ஒதுங்கும்.




### ஜம்ப் லிஸ்ட்ஸ்

விண்டோஸ் 7 தொகுப்பில் நாம் அடிக்கடி பயன்படுத்தும்அனைத்தும் நம் கண்முன் காட்டப்படும் வகையில் அமைக்க வழி தரப்பட்டுள்ளது. அதில் ஒன்று ஜம்ப் லிஸ்ட் ஆகும். நாம் பயன்படுத்தும் பைல்களை வெகு சீக்கிரம் பெற்றுப் பயன்படுத்த இந்த வசதி உதவுகிறது. நாம் அப்போது பயன்படுத்திக் கொண்டிருந்த பைல்களைப் பெற டாஸ்க்பாரில் உள்ள இந்த புரோகிராமின் ஐகனில் ரைட் கிளிக் செய்திட வேண்டும். எடுத்துக்காட்டாக டாஸ்க் பாரில் உள்ள வேர்ட் ஐகனில் ரைட் கிளிக் செய்தால் வேர்ட் புரோகிராமில் நாம் பயன்படுத்திய அனைத்துப் பைல்களும் காட்டப்படும். இந்த பட்டியலிலிருந்து நமக்குத் தேவையான பைலைக் கிளிக் செய்துபெறலாம்.

ஒரு சில புரோகிராம்கள் இந்த ஜம்ப் லிஸ்ட் பயன்பாட்டில் சற்று முன்னதாகவே சில வசதிகளை அளிக்கின்றன. எடுத்துக்காட்டாக, விண்டோஸ் மீடியா பிளேயர் இந்த ஜம்ப் லிஸ்டில் இருக்கையில் அதன் மீது கேர்சரைக் கொண்டு செல்கையில் மீடியா பிளேயரில் உள்ள பாடல்களை இயக்க ஓப்ஷன் உடனடியாகக் கிடைக்கும். இதேபோல் ஜம்ப் லிஸ்ட்டில் உள்ள இன்டர்நெட் எக்ஸ்புளோரரை நெருங்கினால் நாம் ஏற்கனவே பார்த்த தளங்களின் பட்டியல் காட்டப்பட்டு அவற்றை நேரடியாகப் பெறும் ஒப்ஷன் கிடைக்கிறது. இவ்வாறு சில இமெயில் புரோகிராம்களில் அவற்றைத் திறக்காமலேயே மெயில் மெசேஜ் டெக்ஸ்ட் அமைப்பதற்கான ஒப்ஷன் கிடைக்கிறது. இப்படி பல புரோகிராம்கள் அவற்றைத் திறக்காமலேயே அதன் இயக்கத்திற்கு வழி வகுத்துத் தருகின்றன.

(தகவல்கள் வளரும்)

# கணனி வைரஸ்கள் உருவாக்கப்படுவது ஏன்?



கணனி பயன்பாட்டில் பலரின் நேரத்தையும் உழைப்பையும் தேவையற்றமுறையில் வீணாக்குவது வைரஸ்களே எந்த நேரமும் ஒரு பயத்தை உருவாக்கி எந்த ரூபத்தில் வந்து நம் பைல்களைக் காலி செய்திடுமோ? இயக்கத்தை முடக்கி வைத்துவிடுமோ என்ற அச்சத்துடன் நாம் கனணிகளை இயக்க வேண்டியுள்ளது. இந்த சிந்தனையுடன் ஏன் வைரஸ்களை கணனி உருவாக்குகிறார்கள் என்ற கேள்விக்கு விடைகள் பலாவாறாக உள்ளன.

### தனி மனித மனப் பிரச்சினை

பல பதில்கள் கிடைத்தாலும் இந்த பதில் சற்று வேடிக்கையாக இருக்கிறது. தாங்கள் மற்றவர்களைக் காட்டிலும் இந்த கணனி உலகில் வலிமை படைத்தவராக இருக்கிறோம் என்ற உணர்வைப் பெற பலர் வைரஸ்களை உருவாக்குகின்றனர். இந்த உணர்வை மற்றவர்களிடம் காண்பித்துவிட்டாலும் தங்களுக்கு தாங்களே இந்த எண்ணத்தை ஊட்டிக் கொள்கிறார்கள்.

அவர்களுக்கு எந்தப் பலனும் பயனும் இதில் கிடைக்கவில்லை என்றாலும் தன் திறமையைக் கொண்டு சிறிய அளவிலாவது அழிவை உருவாக்கிவிட்டேன் என்ற தீய சிந்தனை இவர்களுக்கு ஏற்படுகிறது. வைரஸ் குறித்த பத்திரிகைகள் மற்றும் இணையதள மீடியாக்கள் எழுதுகையில் ஏதோ சாதனை புரிந்தது போல் எண்ணிக்கொள்கிறார்கள். அதனால் தான் ஒருவர் தான் உருவாக்கிய வைரஸ் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி விட்டது என்ற செய்தியை பெற்ற பின் அதைக் காட்டிலும் அதிக சேதத்தை விளைவிக்கும் வைரஸை எழுத முயற்சிக்கிறார்.


### பணம்

வைரஸை உருவாக்கி எப்படி பணம் சம்பாதிக்க முடியும்? என்பது தான் பலரை இழுக்கும் தூண்டில் பல வழிகளில் சம்பாதிக்கலாம் என்று தெரியவந்துள்ளது. முதலில் டேட்டா திருட்டு வைரஸ் மூலம் அடுத்தவர்களின் கணனியில் நுழைந்து தனிப் பட்டவர்கள் மற்றும் நிறுவனங்கள் பயன்படுத்தும் தகவல்களைத் திருடுவது. தனிப்பட்டவரின் கிரேடிட் கார்ட்களின் தகவல்களைக் கண்டறிந்து அதனைப் பயன்படுத்தி பணம் திருடுவது இன்று மேல் நாடுகளில் சர்வ சாதாரணமாக நடக்கும் ஒரு குற்றமாகி விட்டது. அடுத்தவரின் கணனியை முடக்கி அதனைப் பணயக் கைதியாக்கிப் பணம் பறிப்பது. முதலாவதாக நேரடியாக கண னியில் உரிமையாளரை தான் இப்படி செய்தாகக் கூறி மீண்டும் இயக்க பணம் கேட்பது. இன்னொருவழியில்தான் அதற்கு தீர்வு காணும் மூன்றாவது மனிதனைப்போல் சென்று பணம் பெறு வது இவற்றை ஆங்கிலத்தில் Ransomware என்று அழைக் கின்றனர். Ransom என்ற சொல் பணயக் கைதியை விடுவிக்க வழங்கப்படும் பணம்.

### குழு ஆதிக்கம்

ரவுடிக் கும்பல்கள் போல் வைரஸ் உருவாக்கும் குழுக்கள் ஒன்லைனில் இயங்குகின்றன. இவர்கள் வைரஸ் உருவாக்கி பணம் சம்பாதிப்பதில்லை. ஆனால் குழுவாகச் சேர்ந்து கொண்டு தங்களால் வைரஸ்களை உருவாக்கி அழிவைத் தர முடியும் என ஒன்லைனில் வெப்சைட்டுகளில் ஆரவாரமிடுவது இவர்கள் பொழுதுபோக்கு. இதேபோல் பல கும்பல்களை இன்டர்நெட்டில் காணலாம். இதில் ஒரு மோசமான விடயம் என்ன வெனில் இந்தக் குழுக்கள் ஒன்றுக்கொன்று உதவிக்கொள்வது தான்.

### அரசியல் மற்றும் சமூகப் பழி தீர்த்தல்



ஒரு அரசியல் கட்சி அல்லது சமூகக் குழுவினருக்கு தொல் லை தருவது அல்லது அதனைத் தாக்கும் ஒரு வழியாக வைரஸை உருவாக்குவது இப்படிப் பட்டவர்களின் வேலையாகவுள்ளது. இவர்கள் வைரஸ் களை உருவாக்கி அழிக்கும் வழியே அலாதியானது. உதார ணமாக ஒரு அரசியல் கட்சியின் இணையத் தளத்தைக் கெடுக்க ஒரு வைரஸ் எழுதப்பட்டது. ஆனால் அது நேராக அந்தக் கட்சியின் தளத்தை ஆக்கிரமிக்கும் வகையில் எழுதப்படவில்லை. அதற்குப் பதிலாக உலகின பல்வேறு இடங்களில் உள்ள கணனிகளில் இந்த வைரஸ் புரோக்கிராமினை பதிப்பது முதல் வேலையாகவுள்ளது. அந்த வைரஸ் குறிப்பிட்டநாளில் அக்கட்சியின் இணையத்தளத்தை தான் தங்கும் கணனியில் இருந்து தாக்குவது போல் அமைக்கப்பட்டிருக்கும் அது அடுத்த நிலையாக இருக்கும். பாதிக்கப்படுபவர் இந்த வைரஸ் எங்கிருந்து உருவானது என்று அறிய முடியாது. ஏனெனில் வைரஸ்கள் சம்பந்தமில்லாது கணனிகளில் இருந்து அந்தக் கணனிகளை பயன்படுத்துபவர்களுக்கே தெரியாமல் அந்த அரசியல் கட்சியின் இன்ரநெற் வெப் சைட்டை தாக்கியிருக்கும். இன்னும் பலவகை வைரஸ் தாக்குதல்கள் நாள்தோறும் உருவாகிவருகின்றன. சைவர் உலகின் சாபக்கேடாக இது மாறிவிட்டது. வேறு வழியின்றி இத்தகைய மோசமானவர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்வதிலேயே நாம் உழைப்பையும் நேரத்தையும் செலவழிக்க வேண்டியுள்ளது.

# கணனியை உங்கள் தயாரிப்பாக மாற்ற வேண்டுமா?

கணனியை உங்கள் தயாரிப்புக் கணனியாக என்ன செய்யலாம். இங்கே உங்களுக்காகத் தரப்போகும் டிப்ஸ் சற்று வேடிக்கையாக இருந்தாலும் கணனியை எப்படி எல்லாம் மாற்றி அமைக்கலாம் என்பதற்கு உங்களுக்கு வழி காட்டுவதாகவும் அமையும். அனைத்துக் கணனிகளிலும் இதனை மேற்கொள்ளலாம் என்றாலும் விண்டோஸ் எக்ஸ்பிக் கான குறிப்புகள் கீழே தரப்படுகின்றன. மற்ற ஒப்ரேட்டிங் சிஸ்டங்களில் சில மாற்றங்களுடன் இதனைப் பயன்படுத் தலாம்.



பைல்களு க்கெல்லாம் புரோபர்ட்டீஸ்விண்டோ இருப்பதைப் போல அனைத்துக் கணனி சிஸ்டங்களுக்கும் ஒரு புரோப்பர்ட்டி விண்டோ ஒன்று உண்டு. இந்த புரோபர்ட்டீஸ் என்பது ஒரு பைல் அல்லது கணனி யின் அடிப்படைத் தகவல் களைக் காட்டும் ஒரு விண்டோ ஆகும். இங்கு கணனியின் புரோபர்ட்டீஸ் விண்டோ வினைப் பெறும் வழியைப் பார்க் கலாம்.


- முதலில் உங்கள் கணனியை உங்கள் தயாரிப்புக் கணனியாக மாற்ற வேண்டும் என எண்ணுகிறீர்கள் இல்லை யா? அதற்கேற்ற படம் ஒன்றைத் தயார் செய்துகொள்ளுங் கள். இது ஒரு லோகோவாக இருக்கலாம். அல்லது நீங்கள் கணனி இயக்குவது போன்ற போட்டாவாக இருக்கலாம்.

இதற்கு பெயிண்ட் புரோகிராமினைத் தேர்ந்தெடுக்கவும். இது ஒப்பரேட்டிங் சிஸ்டத்துடனே வருவதால் பிரச்சினை இல்லை. Start>>All Programs>>Accessories>>Paint எனச் சொல்லவும்.

புரோபர்ட்டீஸ் கட்டத்தில் அமைக்கப்பட இருக்கும் படத் தின் பிக்ஸெல் அளவு 180X115 என்ற அளவிலேயே இருக்க வேண்டும். எனவே இந்தப் புரோகிராம் தரும் கொன்வஸ் என்ற படத் தளத்தின் அளவை இந்த அளவிற்கு மாற்ற வேண்டும். இதற்கு மெனுவில் என்ற பிரிவில் கிளிக் செய்திடவும். அதன் பின் Attributes என்பதைத் தேர்ந்தெடுத்தால் ஒரு கட்டம் கிடைக்கும். இதில் அளவெடுக்கும் அலகாக Pixeis என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

இதில் மேலே சொன்ன அளவினை என்டர் செய்திடவும். பின் ஓகே கிளிக் செய்திடவும். இனி லோகோவினை இதில் தயார் செய்திடலாம். பெயிண்ட் புரோகிராம் இதற்கென அனை த்து டூல்ஸ்களும் இருப்பதனைப் பார்த்திருப்பீர்கள். அல்லது கிளிப் ஆர்ட் சென்று அதில் உங்களுக்குப் பிடித்த படத்தினைத் தேர்ந்தெடுத்து இதில் அமைக்கவும். அல்லது உங்களுக்குப் பிடித்த போட்டோவினை எடுத்து இதில் அமைக்கவும்.

இனி இந்தப் படத்தை சேவ் செய்திட வேண்டும். File தேர்ந் தெடுத்து பின் Save As தேர்ந்தெடுக்கவும். இந்த பைலுக்கு oemlogo.bmp எனப்பெயர் கொடுத்து C:\ Windows\ System 32 என்ற டைரக் டரியில் சேவ் செய்திடவும்.




அடுத்து கணனிக்கு இது தான் லோகோ என்று செட் செய்திட சிறிய புரோகிராம் ஒன்றை எழுத வேண்டும். மிக எளிதான சில வரிகள் தான். இந்த வரி களை எழுத Notepad என்னும் புரோ கிராமினைத் திறக்கவும். இந்த புரோ கிராமினைப் பெற Start, All Program, Accessori es,Notepad எனச்செல்லவும். அடுத்துகீழே கொடுத்துள்ள வரிகளை அப்படி யே டைப் செய்திடவும்.

```
[General]
Manufactrer=Neil's
Model=Dell Inspiron 8100
[Support Information]
Line 1=This PC was created
Line 2=by< உங்கள் பெயர் >
Line 3=Enjoy using it!
Line 4=************
```

இதில் உள்ள Line 1, 2,3,4 என்பதில் நீங்கள் விரும் பும் வரிகள் டைப் செய்திடலாம். இன்னும் சில வரிகளை இணைக்க வேண்டும் என விரும்பினாலும் சேர்க்கலாம்.

இனி இந்த பைலை சேவ் செய்திட File மற்றும் SaveAs தேர்ந்தெடுத்து சேவ் செய்திடவும். அதே C:\Windows\System 32 டைரக்டரியில் சேவ் செய்திடலாம். ஆனால் பைலின் பெயர் oeminfo.ini என இருக்க வேண்டும். இவ்வாறு செய்து விட்டுப் பின் உங்கள் கணனியை ரீ ஸ்டார்ட் செய்து பின் கணனி புரோபர்ட்டீஸ் பாருங்கள். நீங்கள் கொடுத்த லோகோ மற்றும் டெக்ஸ்ட் அங்கு கிடைக்கும்.

> உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கிறான்.
>
> – நார்மன் வின்சென்ட் பீல்

## வலம்புரி

### இந்தியா பொறுப்புடன் நடக்குமென்ற நம்பிக்கை இன்னமும் உண்டு

இலங்கை இனப்பிரச்சினை என்பது சர்வதேச அழுத்தம் இல்லாமல் தீர்க்க முடியாதென்பது நிறுத்திட்டமான உண்மை.

சர்வதேச அழுத்தம் கூட இலங்கை அரசுகளை இன்னமும் இனப்பிரச்சினை நோக்கிய தீர்வுக்கு கொண்டுவரவில்லை.

அப்படியானால் சர்வதேச அழுத்தமே இனப்பிரச்சினைக்கு தீர்வு தரும் என்று எவ்வாறு கூறமுடியும் என யாரேனும் கேட்பார்களாயின் அதற்கான விடை சர்வதேச அழுத்தம் காத்திரமானதாக இருக்க வேண்டுமென்பதாகும்.

வன்னியில் யுத்தம் நடந்து மக்கள் இடம்பெயரும் நிலையில் கூட சர்வதேச அழுத்தம் போதுமானதாக இல்லை.

எனவே சர்வதேச அழுத்தம் உச்சமானதாக இருக்கும் போது தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய நினைப்பை இலங்கை அரசுகளிடம் ஏற்படுத்த முடியும்.

சுயமான இனப்பிரச்சினைத் தீர்வு என்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

அவ்வாறான சாத்தியம் இருக்குமென யாரேனும் கூறுவார்களாயின் அவர்களுக்கு இலங்கை இன விவகாரம் குறித்த அடிப்படை அறிவு கூட அறவே இல்லை என்று கூறலாம்.

எனவே சர்வதேச அழுத்தம் என்ற தேவை இங்கு அவசியமாகின்றது. அதிலும் யுத்தம் முடிபடைந்து விட்டதென்ற நிலையில் இனப்பிரச்சினை முடிந்து விட்டதெனக் கருதும் அரசியல் தலைமைகளும் இருக்கவே செய்யும் இந்நிலைமையானது இனப்பிரச்சினைக்கான தீர்வை மிகத் தொலைவில் நகர்த்தி விடும்.

ஆக சர்வதேசத்தின் அழுத்தம் ஒன்றுதான் தமிழர்களின் உரிமை தொடர்பில் ஏதேனும் நியாயத்துவத்தை செய்தாக வேண்டும்.

ஆனால் சர்வதேச தலையீடு என்பதை இலங்கையின் அண்டை நாடான இந்தியாவே நிர்ணயம் செய்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் அக்கறை கொண்டுள்ள போதிலும் அவை இந்தியாவின் முகத்தை பார்த்து மௌனம் சாதிக்கின்றன.

ஆகவே இலங்கை இன விவகாரம் என்பது இந்தியாவின் அசைவுகளிலேயே தங்கியுள்ளதென்ற முடிவுக்கு நாம் வர முடியும்.

இதனடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுக் குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று இனப்பிரச்சினைத் தீர்வு – நலன்புரி முகாம்களில் உள்ள மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் சில உத்தரவாதங்களை வழங்கியுள்ளது.

அந்த உத்தரவாதங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்ற கண்காணிப்பும் கரிசனையும் இந்தியாவிடம் நிறையவே இருக்க வேண்டும்.

# பௌத்த மதத்தின் அடிப்படையில் யுத்தத்தின் மூலம் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது

## ஐ.தே.க எம்.பி வஜிர அபேவர்த்தன

(கொழும்பு)

யுத்த வெற்றிகள் தொடர்பிலான பல முக்கிய தகவல்களை அரசாங்கம் மூடி மறைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி யின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் வஜிர அபே வர்தன தெரிவித்துள்ளார். அரசாங்க ஊடகங்களில் வெளிக்கொணரப்படாத பல உண்மைத் தகவல்களை விரைவில் ஐக்கிய தேசியக் கட்சி மக்களுக்கு அம்பலப்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு அஞ்சி தனியார் ஊடகங்களுக்கும் உண்மைகளை வெளிக்கொணர்வதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இறுதிக் கட்ட போராட்டத்தில் வெற்றிகளை மட்டுமே அரசாங்கம் பிரச்சாரம்செய்து வரு வதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ரத்கம பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கூட்டமொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரபாகரன்கொல்லப்பட்ட போதிலும் பிரச்சினை அதே நிலை யில் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். பௌத்த மதத்தின் அடிப்படையில் யுத் தத்தின் மூலம் தீர் வுகளை பெற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிங்களவர் நீடுழி வாழ வேண்டும் தமி ழர்கள் செத்துமடிய வேண்டும் என்பதே தற் போதைய பௌத்த தர்மமாக சிலர் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ–6)

# இலங்கையில் 1.7 மில்லியன் முதியோர்கள்; தேசிய முதியோர் ஆணைக்குழுவின் ஆய்வில் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் சகல மாவட்டங்களும் அடங்கலாக சுமார் 1.7 மில்லியன் முதியோர் உள்ளதாக இலங்கை தேசிய முதியோர் ஆணைக்குழு மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற முதியோருக்கான தேசிய கருத்தரங்கிலேயே இத் தகவல் வெளியிடப்பட்டது .

அக்கருத்தரங்கில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

இலங்கையின் மொத்த சனத் தொகையானது 2050 ஆம் ஆண்டில் 27.6 சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2003 முதல் 2009 ஆம் ஆண்டு வுரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி60முதல் 70 வயதுக்குட்பட்டோர் 56.4 வீதமும் 70 முதல் 80 வயதுக்குட்பட்டோர் 32.3 வீதமும் 80வயதுக்கும் 90வயதுக்குமுட்பட்டோர் 10 வீதமும் 90 வயதுக்கு மேற்பட்டோர் 1.3 வீதமும் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் 60வயதுக்கு மேற்பட்டோர் முதியவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை ஒப்பிடும் போது இலங்கையில் முதியோர்களின் எண்ணிக்கை மகிழ்ச்சிக்குரியதெனவும் தெரிவிக்கப்படுகிறது .

மாகாண மட்டக் கணிப்பீடுகளின் படி மேல் மாகாணத்தில் 4 இலட்சத்து86 ஆயிரத்து 716 முதியவர்களும் வட மாகாணத்தில் 73 ஆயிரத்து 56 பேரும் கிழக்கு மாகாணத்தில் 89 ஆயிரத்து 288 பேரும் 60வயதுக்கு மேற்பட்டவர்களாக உள்ளதோடு மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 86ஆயிரத்து 79பேரும், களுத்துறை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து ஆயிரத்து 250பேரும் , கம்பஹா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 99ஆயிரத்து387 பேரும் முதியோர் வயதெல்லைக்குள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகக் கூடிய எண்ணிக்கையான முதியோர் கம்பஹா மாவட்டத்திலும் ஆகக் குறைந்த எண்ணிக்கையான முதியோர் கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ–6)

## உலக நாடுகளில் 971 இலங்கையர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்

### பாதுகாப்பு வட்டாரம் தகவல்

(கொழும்பு)

971 இலங்கையர்கள் உலக நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை பாதுகாப்பு படையினரினால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி இவர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

பிரான்ஸ் , ஜேர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரப்பட்டுள்ளது. அதிகமானவர்கள் சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. போலியான தகவல்களை வழங்கி அரசியல் தஞ்சம் கோருவோர் தொடர்பில் அந்தந்த நாடுகளுக்கு அரசாங்கம் அறிவிக்கத்திட்டமிட்டுள்ளது. (ஓ–6)

## பாகிஸ்தான் கப்பலில் மறைத்து வைத்திருந்த ஹெரோயின் சுங்க அதிகாரிகளால் பறிமுதல்

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து கொழும்பு துறைமுகத்திற்கு வந்த கோரியா என்ற கொள்கலன் கப்பலில் இருந்து ஒரு கோடியே 25 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் சுங்கத் திணைக்களத்தினரால் கைப்பற்றப் பட்டுள்ளதாக சுங்க அதிகாரி தயாவன்ச செனவிரத்ன தெரிவித்தார் .

35 ஆயிரம் கிலோ எடை கொண்ட ஆயிரத்து 900 கிழங்கு மூடைகளில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்த ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளது.

சுமார் 240 கிழங்குகளில் இந்த 2 கிலோ போதை பொருட்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இன்று சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் என்பதால் இவ்வாறான ஹெரோயின் போதைப்பொருளைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியமை மகிழ்ச்சி அளிப்பதாக சுங்க அதிகாரி தயாவன்ச செனவிரத்ன மேலும் தெரிவித்தார். (ஓ–6)

# வெள்ளி நற்சிந்தனை 77

# பக்தியின் மொழி தமிழ்

மக்கள் வாழ்வியலில் இன்று கருவிக் கையாட்சி பெரிதும் வரவேற்புப் பெற்றுள்ளது. தொடர்பாடல் நிலையில் கைத் தொலைபேசி என்னும் கருவி செல்வாக்குடன் திகழ்கிறது. அதனை வெறுமனே தொடர்பாடலுக்கு மட்டுமன்றிப் பல் தேவைகளுக்குப் பயன்படுத்தும் கருவி யாகவும் எல்லோரும் ஏற்றுள்ளனர். ஆனால், முற்காலங்களில் விஞ்ஞானத் தொழில்நுட்ப நிலையை விட கலைநுட்ப நிலையில் பல கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் இசையோடு தொடர்புடைய கருவிகள் வழிபாட்டு நடைமுறைகளில் முக்கியம் பெற்றிருந்தன. அதனைப் பக்திப் பாடல்களில் குறிப்பிட்டு நாயன்மார் பாடுவதற்குக் காரணம் கருவிக்கையாட்சி எல்லோரையும் வசப்படுத்தியமையே.

இறைவனைப் பற்றிப் பாடுகின்றபோது இசைக் கருவிகளும் இணைவது இனிமையையும் பரவசத்தையும் ஊட்டியது. கோவில்களில் திருவிழாக்காலங்களில் இசைக் கருவியின் பயன்பாடு பெரிதும் பேணப்பட்டது. பாடலைப் பாடும் போது அதனுடன் இணையும் வாத்தியங்களின் ஒலி கேட்போர் மனதைப் பிணித்தது. இதனால் இக் கருவிகளின் பயிற்சியும், பேணலும் கோயில் நடைமுறைகளில் ஒன்றாக இணைந்திருந்தன.

திருவையாறு திருத்தலத்திலே இசைக் கருவிகள் பயன் பட்டவாற்றைச் சம்பந்தர் தனது தேவாரங்களில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அவருடைய இளமைப் பருவம் இயல்பாகவே இசைக் கருவிகளில் நாட்டமுற்றிருந்ததால் பாடல்களில் குறிப்பிடுவதும் இயல்பாயிற்று. தனது பாடல்களில் முதலிரு அடிகளில் இறைவனின் அழகுக் கோலத்தைப் பாடும் சம்பந்தர் அடுத்த இரண்டு அடிகளில் கோயிலில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகள் பற்றிய குறிப்பை இணைத்துள்ளார். வீணை, முழவம், குழல், மொந்தை என அவற்றை வகைப்படுத்திக் காட்டுகிறார். அழகான திருக்கோலங் கொண்ட இறைவன் திருநடனம் செய்யும் போது பண் சேர்ந்த பாடலும் அணிசெய் இசைக் கருவிகளும் தேவை. இவ்வாறு நடைபெறும் அரங்க விழாவை அனைவரும் பார்த்துப்பரவசமடையலாம்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வழிபாட்டில் இன்றும் இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இன்று இசைக் கருவிப் பயிற்சியில் யாருக்கும் விருப்பமில்லையாகையால் எந்திரப் பொறியால் இசைக் கருவிகளில் ஒலியை ஒலித்து இறைவன் ஆடலுக்குப் போலியான இசையை வழங்க முற்பட்டுள்ளனர். அதனால் கருவிப் பயிற்சியும் பயன்பாடும் புறந்தள்ளப்பட்டுள்ளன. விரல்களால் இயக்கும் இசைக்கருவி உள்ளத்தைத் தொட்டு உணர்வில் கலக்கும் தன்மையது. வழிபாட்டில் உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி இறை சிந்தனையை ஏற்படுத்தத்துணை நின்றது.

“கோடல் கோங்கங் குளிர் [illegible]விள மாலை குலாயசீர்
ஓடு கங்கை யொளி வெண் பிறை சூடு மொருவனார்
பாடல் வீணை முழவங்குழன் மொந்தை பண்ணாகவே
ஆடுமாறு [illegible]லானுமையாறுடை யையனே”

# யாழ்.மாவட்டத்தில் காளான் செய்கை

(நேற்றைய தொடர்ச்சி)

**அறுவடை அறை**

- நேரடியாக சூரிய ஒளி விளாத வெளிச்சமுள்ள இடமாகவும், காற்றோட்டமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
- சாரீரப்பதன் 75-85 வீதமும், வெப்பநிலை 25-30 பாகை செல்சியஸ்ஆக இருத்தல் வேண்டும்.
- அடை காக்கும் அறையில் பூஞ்சணங்கள் வளர்ச்சியடைந்த பின்னர் பூக்கள் போன்ற விசேட வடிவமான காளானைப் பெறுவதற்கு வாய்ப்பகுதி வெட்டி அகற்றப்பட்ட பின்னர் ஊடகப் பைகளுக்கு நீரை துகள்களாக விசிறுதல் வேண்டும்.

வாய்ப்பகுதி வெட்டி வைக்கப்பட்ட ஊடகப் பைகள்



அறுவடை அறைக்கு மாற்றி வைக்கப்பட்ட ஊடகப்பை ஒன்றிலிருந்து 300-400 கிராம் காளானை 7-10 நாட்கள் இடைவெளியில் 8-10 தடவைகளில் அறுவடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு அறுவடையின் பின்பும் வாய்ப் பகுதியை சுரிய கத்தியினால் சுரண்டி விடல் வேண்டும்.

**காளான்களைப் பாதுகாத்தலும் சேமித்தலும்**

- அறுவடை செய்யப்பட்ட காளான் பொலிப் புறப்பலீன் பைகளில் அடைக்கப்பட்டு சாதாரண நிலைமைகளில் 1-2 நாட்கள் சேமிக்க முடியும்.
- 2 கிழமைகளில் குளிரூட்டியில் வைத்து பாதுகாக்கலாம்.
- காளானை உலர்த்தி பைகளில் அடைத்தும் பாதுகாக்க முடியும்.

*மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் காளான் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சி நெறிகள்.*

காளான் பயிற்சி நெறிகள் இளைஞர் சேவைக் கழகத்தின் 82 பயனாளிகளுக்கும் 5 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலிருந்து 65 பயனாளிகளுக்கும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இத்துடன் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திற்கு கல்விச் சுற்றுலா மேற்கொள்ளுகின்ற பாடசாலை மாணவர்களுக்கும் விவசாயப் பொதுமக்களுக்கும் காளான் பற்றிய விளக்கமளிக்கப்பட்டு வருவதனால் இது தொடர்பான விழிப்புணர்வு மேம்படுத் தப்படுகின்றது.

**உற்பத்தி செய்யப்படும் இடங்களும் ,காளான் சந்தைப்படுத்தலும்**

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், மட்டுவில் ,சிறுப்பிட்டி, ஏழாலை, அளவெட்டி, சிறுவிளான், ஊரெழு, யாழ் நகர் 2ஆம் குறுக்குத்தெரு ஆகிய பகுதிகளில் காளான் உற்பத்தி நடவடிக்கை தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், சிறுப்பிட்டி, ஏழாலை ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்படும் காளான் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய விற்பனை நிலையத்திற்கு ஊடாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மட்டுவிலில் உற்பத்தி செய்யப்படும் காளான் அலுவலகங்களிற்கு ஊடாக விற்பனை செய்யப்படுகின்றது. மற்றைய உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் இடத்திலேயே நேரடியாக நுகர்வோரிற்கு விற்பனை செய்கின்றனர்.

**காளான் வித்திகளின் விநியோகம்**

காளான் உற்பத்தியை சரியான முறையில் சரியான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கொள்வதனால் உடலிற்கு வேண்டிய தரமான போசனை நிறைந்த உணவைப் பெற்றுக்கொள்ளமுடியும். விவசாயத் திணைக்களத்தினால் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் வித்திகள் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய விற்பனை நிலையத்தினூடாக காளான் உற்பத்தியாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. (முற்றும்)

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் காளான் விற்பனை



**செல்வி. ஸ்ரீரூபி கந்தசாமி**
விவசாயப் போதனாசிரியர்
பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

## இலங்கை வங்கி

## ஏலவிற்பனை அறிவித்தல்

***1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22ஆம் பிரிவு (397ஆம் அத்தி) ன் கீழ் விற்பனை அறிவித்தல்.***

**கடன்தொடர்பு இல.2889204, 6987860**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 17.04.2009 ஆம் திகதி 1598 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2009. 04.08 ஆம் திகதி டெய்லி நியூஸ், தினமின, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல.692, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.கே.பி.பாலகிருஷ்ணன் 18.07.2009 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் பிரிவிலும் நல்லூர் பிரிவில் திருநெல்வேலி இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் 'அருமகலட்டி' என அழைக்கப்படும் மற்றும் பெயருடைய ஆறரை லாச்சம் (6 1/2 லாச்சம் V.C) விஸ்தீரணமுடைய காணி. இவ் ஆறரை லாச்சங்களிலிருந்து (லாச்சம் 6 1/2 V.C) பிரிக்கப்பட்ட ஒரு பகுதி வடக்குப் பக்கத்தில் மூன்றரை லாச்சங்கள் (3 1/2 லாச்சங்கள் V.C) ஏற்கனவே சீதனம் வழங்கப்பட்டுள்ளதுடன் தெற்குப் பக்கமாக காணியின் மீதிப்பாகம் மூன்று லாச்சங்கள் (03 லாச்சங்கள் V.C) விஸ்தீரணமுடைய காணியும் வீடும் பயிரிடப்பட்ட மற்றும் இயற்கைப் பயிர்களும் வடக்கு எல்லையில் காணப்படும் கிணற்றின் பங்கும் வழி/வாய்க்கால் பாவிப்புரித்தும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் R.ரத்னராஜா வரைந்த 2005.06.20 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.1064 இன் கீழ் துண்டு 01 என விபரித்துள்ளதுடன் மூன்று லாச்சங்களும் பதினாறு தசம் எட்டு ஒன்று குழிகளும் (03 லாச்சங்களும்V.C 16.81 குழிகளும்) விஸ்தீரணமுடையது. இது நல்லூர் பிரதேச சபை எல்லைகளுள் வட்டாரம்இல.09 இல் யாழ்ப்பாணம் ஆடியபாதம் வீதி வரிமதிப்பிலக்கம் 116/2 ஐக் கொண்டது. இக் காணியின் எல்லைகளாவன:- கிழக்கில் P.சேனாதிராஜாவின் ஆதனமும், வடக்கில் கணேசனின் மனைவி குமுதினியின்ஆதனமும், மேற்கில் ஒழுங்கையும், தெற்கில் P.சேனாதிராஜாவின் ஆதனமும் எல்லைகளாகக் கொண்டு இவ் எல்லைகளுள் அடங்கும் சகலதும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தொகுதி D 356 பக்கம் 150 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

**இலங்கை வங்கி,**
**திருநெல்வேலி.**

**E.பிரேமராஜன்**
**கிளை முகாமையாளர்.**

(C/2670)

# வானில் நடக்கும் இயற்கையான நிகழ்வுகளால் பேரழிவு ஏற்படும் என்பது மூடநம்பிக்கை

## வானவியல் நிபுணர் விளக்கம்

(சென்னை)

அடுத்தடுத்து கிரகணங்கள் ஏற்படுவதால் உலகப் போர் மூளும் . பேரழிவு ஏற்படும் என்று நினைப்பது எல்லாம் மூட நம்பிக்கை என்று வானவியல் நிபுணர் விளக்கம் அளித்துள்ளார்.

ஜுலை மாதம் 22 ஆம் திகதி சூரிய கிரகணம் நிகழ உள்ள நிலையில் சூரியகிரகணம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் , கிரகணநிகழ்வைப் பாதுகாப்பான முறையில் பார்ப்பது பற்றி விளக்குவதற்காகவும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையும், சென்னை கிண்டியில் உள்ள தமிழ் நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமும் இணைந்து மூன்று நாய் பயிலரங்கை ஆரம்பித்துள்ளன.


இதில் கலந்துகொண்ட வானவியல் நிபுணரான தேவதாஸ் நிருபர்களிடம் தெரிவிக்கையில், சூரிய கிரகணம், சந்திரகிரகணம் என்பவை வானில் இயற்கையாக நடைபெறும் நிகழ்வுகள்.

அவை அடுத்தடுத்து நிகழ்வதால் உலகில் போர் மூளும் ,பேரழிவு ஏற்படுமென்று மக்கள் மத்தியில் தவறான கருத்துக்கள் நிலவுகின் றன.

இவையெல்லாம் மூடநம்பிக்கைகள் ஆகும். இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகத்தான் இதுபோன்று பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன.

அடுத்த மாதம் 22ஆம் திகதி நிகழவிருக்கும் முழு சூரிய கிரகணத்ததை அதிகாலையில் 5.50 மணிக்கு பாதுகாப்பான பார்க்கலாம். இந்தியாலைவப் பொறுத்தவரை இது பகுதி சூரிய கிரகணம்தான்.முழு சூரிய கிரகணத்தை நோபளத்திலும் சீனாவிலும் பார்க்கலாம் என்றார். (ஓ-6)

# சாண எரிவாயு அடுப்பில் இயங்கும் தொழிற்சாலை



(திண்டுக்கல்) வத்தலக்குண்டு அருகே சாண எரிவாயு அடுப்பில் பால்பொருள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை இயங்கி வருகிறது.


திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு அருகே உச்சபட்டி கிராமத்தில் கோடை பார்ம்ஸ் என்ற பாலாடை கட்டி தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கி வருகிறது. இங்கு நான்கு சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சாண எரிவாயு கலனில் இருந்து வெளியாகும் காஸ் மூலம் இங்கு பணிபுரியும் 35 தொழிலாளர்களுக்கு தினமும் மூன்று நேரம் சமையல் செய்யயப்படுகிறது. மற்ற மூன்று கலனில் இருந்து வெளியாகும் காஸ் மூலம் பாலாடை கட்டி தயாரிக்க தேவையான ஸ்டீமினை சூடேற்ற பயன்படுத்துகின்றனர். இவர்கள் சாண எரிவாயு கலனில் புதிய நுட்பத்தையும் பயன்படுத்துகின்றனர்.பாலாடை கட்டி தயாரித்த பின்னர் வெளியேறும் பால் கழிவினையும் இந்த எரிவாயு கலனில் சேர்த்து விடுகின்றனர். இதன் மூலம் கூடுதல் காஸ் கிடைக்கிறது. காஸ் தயாரித்த பின்னர் வெளியேறும் கழிவுகளில் இயற்கை உரம் தயாரித்து பண்ணையில் வளர்க்கப்படும் மரங்களுக்கு பயன்படுத்துகின்றனர்.

இத் தொழிற்சாலை இயக்குநர் ஹரி கூறியதாவது, தற்போது அதிகரித்து வரும் மின் தட்டுப்பாட்டினை சமாளிக்கவும் , டீசல் விலையினை எதிர்கொள்ளவும் எரிபொருள் தேவைக்கான புதிய நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. மிக, மிக குறைந்த செலவில் தரமான எரிவாயு தயாரிக்க சாண எரிவாயு கலன் மிகவும் உதவியாக உள்ளது. நாங்கள் பாலாடை கட்டி எடுத்தபின்னர் வெளியாகும் கழிவுப் பாலை ஊற்றுவதால் கலனில் இருந்து வழக்கத்தை விட மூன்று மடங்கு காஸ் அதிகம் கிடைக்கிறது.

இதில் அழுத்தம் அதிகரிக்கவும் ஒரு நுட்பத்தைப் பயன்படுத்தி காஸ் இயக்கி வருகிறோம். இதற்கு ஏற்ப நாங்கள் ஸ்டீம் அடுப்பினை வடிவமைத்துள்ளோம். காஸ் கிடைக்காத சில நேரங்களில் விறகு பயன்படுத்துவோம். எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக சாண எரிவாயு காஸ் பயன்படுத்தி வருகிறோம். தற்போது மின்தடை அதிகரித்துள்ளதால் இந்த காஸ் மூலம் ஜெனரேட்டர் இயக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் என்று தெரிவித்தார். (ஓ-6)

# இந்திய அணியை கரை சேர்ப்பாரா தோனி?

## மேற்கிந்தியத்தீவுகளுடனான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்




(ஜமெக்கா)

இந்திய அணித்தலைவர் தோனிக்கு இன்னொரு கடின சவால். இருபது-20 உலகக் கோப்பை சோகத்தை தொடர்ந்து ராசியில்லாத மேற்கிந்தியத்தீவுகள் மண்ணில் காலடி எடுத்து வைத்துள்ளார்.

இங்கு 2006இல் நடந்த ஒருநாள் போட்டித் தொடரில் இந்திய அணி படுதோல்வி அடைந்தது. அடுத்து 2007இல் நடந்த உலகக் கோப்பை (50 ஓவர்) தொடரில் முதல் சுற்றுடன் நடையை கட்டியது.

தற்போது 4 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாட உள்ளது. இம் முறை சச்சின், சேவாக், சகீர்கான் இல்லாமல் களமிறங்கும் இந்திய அணி சுத்தித்துக்கட்டுமானை ஆராய்வோம்.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த இருபது-20 உலக கோப்பை தொடரில் இந்திய அணி சுப்பர்-8 சுற்றுடன் வெளியேறியது. இத் தொடரில் சேவாக் காயம், ஊடங்களுடன் மோதல், இங்கிலாந்துக்கு எதிரான முக்கிய போட்டியில் ரவிந்திர ஜடேஜாவை தேவையில்லாமல் முன்னதாக களமிறக்கியது என நிறைய சர்ச்சைகளை அணித்தலைவர் தோனி சந்தித்தார். இதில் இருந்து மீள்வதற்குள் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான 4 ஒரு நாள் போட்டிகளில் அணியை வழிநடத்தவுள்ளார்.

### துடுப்பாட்டம் பலவீனம்

காயம் காரணமாக சச்சின், சேவாக், சுரேஸ் ரெய்னா ஆகிய முன்னணி வீரர்கள் இடம் பெறாத நிலையில் அணியின் துடுப்பாட்டம் பலவீனமாக காட்சி அளிக்கிறது. ஆரம்ப துடுப்பாட்ட வீரராக காம்பீருடன் மீண்டும் ரோகித் சர்மா களமிறங்கலாம்.

இருபது-20 உலக கோப்பை தொடரில் சேவாக் போன்று அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த தவறினார் ரோகித்சர்மா. இம்முறை பந்துகள் எகிறும் மேற்கிந்தியத்தீவுகள் ஆடுகளத்தில் என்ன செய்யப் போகிறார் என தெரியவில்லை.

இவர் ஏமாற்றும் பட்சத்தில் தமிழக வீரர் முரளி விஜய் ஆரம்ப நிலையில் களமிறக்கப் படலாம். ரோகித் சர்மா மீண்டும் நடுத்தரவரிசையில் வர வாய்புள்ளது.

ரெய்னா இடத்தை நிரப்புவது கடினம். தவிர டிராவிட், கங்குலி, லக்ஸ்மன் போன்ற மூத்த வீரர்கள் யாருமே இல்லாத நிலையில் யுவராஜுக்கு கூடுதல் சுமை ஏற்படலாம். இவர் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆட வேண்டும். யூசுப் பதான் பொறுப்பாக செயல்படுவார் என நம்பலாம்.

ரவிந்திர ஜடேஜா, பத்ரிநாத், தினேஷ் கார்த்திக் வாய்ப்பை வீணடிக்க கூடாது. அணித் தலைவர் தோனி பழைய அதிரடி ஆட்டத்துக்கு மாறவேண்டும். இருபது-20 உலகக் கோப்பை தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணியிடம் சந்தித்த தோல்விக்கு பழி தீர்க்க வேண்டும்.

### பந்துவீச்சில் ஆறுதல்

பந்துவீச்சு ஓரளவுக்கு பலமாகவே உள்ளது. ஆனாலும் காயம் காரணமாக சகீர்கான் இல்லாதது சிக்கல் ஏற்படுத்தலாம். இவருக்கு பதில் இடம்பெற்றுள்ள 30 வயதான ஆசிஷ் நெஹ்ரா சர்வதேச போட்டிகளில் மிக நீண்ட இடைவெளிக்குபின் களம் இறங்குகிறார். 2003இல் நடந்த உலக கோப்பை போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக 6 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

சமீபத்திய ஐ.பி.எல். போட்டிகளில் டில்லி டேர்டேவில்ஸ் அணிக்காக விளையாடிய இவர் 19 விக்கெட்டை கைப்பற்றினார். இந்த அனுபவம் கைகொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

இஷாந்த் சர்மா விக்கெட் வீழ்த்த வேண்டியது அவசியம். ஆர்.பி.சிங்., பிரவீண் குமார் நம்பிக்கை தருகின்றனர். சுழலில் வழக்கம் போல் ஹர்பஜன், பிரக்யன் ஓஜா கைகொடுக் கலாம்.

களத்தடுப்பு தான் தொடர்ந்து கவலை அளிக்கிறது. கைகள் நழுவாமல் இருந்தால் வெற்றியும் நழுவாமல் இருக்கும் என்பதை இந்திய வீரர்கள் உணர்ந்து செயல்படவேண்டும்.

### ஹயில் பலம்

மேற்கிந்தியத்தீவுகள் அணியை பொறுத்தவரை சொந்த மண்ணில் உற்சாகமாக களமிறங்குகிறது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ஹயில், சர்வான், சந்தர் போல் அடங்கிய அனுபவ கூட்டணி மிரட்டுகிறது.

ஹயில் வாண வேடிக்கை காட்டினால் இமாலய ஓட்ட எண்ணிக்கையை எளிதாக எட்டலாம் இருபது-20 உலக கோப்பை தொடரில் இந்திய பந்துவீச்சை துவம்சம் செய்த பிரவோ அதிரடிக்கு தயராக உள்ளார்.

பந்துவீச்சில் வேகப்புயல் எட்வோர்ட்ஸ் காயம் காரணமாக இடம் பெறாததது இந்திய அணிக்கு சாதகமான விடயம். ஜெரோம் ரெய்லர், ரவி ராம்பால், லயோனல் பாக்கர், டேரன் சமி ஆகியோர் சாதிக்கலாம்.

### யாருக்கு வாய்ப்பு?

இரு அணிளுமே இக்கட்டான நிலையில் களமிறங்குகிறது. மேற்கிந்தியத்தீவுகள் அணி கடந்த 6 ஒரு நாள் போட்டி தொடரில் ஒன்றில் மட்டுமே வென்றுள்ளது. எனவே இம் முறை மிகவும் கவனமாக செயல்பட்டு தொடரைகைப் பற்ற முயற்சிக்கும்.

இருபது-20 உலகக் கோப்பை தொடர் தோல்விக்கு பரிகாரம் தேட வேண்டிய நிலையில் இந்திய அணி உள்ளது.

இத் தொடரில் தேனீக்கள் போல கொட்டுவோம் என ஏற்கனவே அணித்தலைவர் ஹயில் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த சவாலை சமாளித்து தோனி தலைமையிலான அணி கோப்பையுடன் நாடு திரும்ப வேண்டும் என்பதே இந்திய ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

### இந்தியா அபாரம்

இந்திய மண்ணில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக கடந்த 2007இல் வதோதராவில் நடந்த போட்டியில் இந்திய அணி 50 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 341 ஓட்டங்கள் குவித்து தனது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்தது. ஜாம்ஷெட்பூரில் கடந்த 1983இல் நடந்த போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி அதிகபட்சமாக 45 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 333 ஓட்டங்களை பதிவுசெய்தது.

மேற்கிந்தியத்தீவுகள் மண்ணில் இந்திய அணி கடந்த 1983இல் கயானாவில் நடந்த போட்டியில் அதிகபட்சமாக 47 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 282 ஓட்டங்கள் சேர்த்தது. ஹராரேயில் கடந்த 2001இல் நடந்த போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி அதிகபட்சமாக 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 290 ஓட்டங்கள் குவித்தது.

### மேற்கிந்தியத்தீவுகள் ஆதிக்கம்

இந்திய-மேற்கிந்தியதீவுகள் அணிகள் இதுவரை 90 ஒருநாள் போட்டியில் மோதியுள்ளன. இதில் மேற்கிந்தியத்தீவுகள் 53 போட்டியில் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்திய அணி 35 போட்டியில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் மண்ணில் இந்திய அணி ஒரு முறை (2001/02) மட்டும் தொடரை வென்று சாதித்தது. நான்கு முறை (1982/83, 1988/89, 1996/97, 2006) தொடரை இழந்து ஏமாற்றியது. ஐந்துமுறை இந்திய சுற்றுப்பயணம் மேற் கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டு முறை (1987/88, 2002/03) தொடரைகைப் பற்றி அசத்தியது. மூன்று முறை (1983/84, 1994/95, 2006/07) வெறுங்கையுடன் திரும்பியது.

முன்னாள் இந்திய அணித்தலைவர் அசாருதின் மேற்கிந்தியத்தீவுக்கு எதிராக 19 போட்டியில் அணித்தலைவராக செயல்பட்டுள்ளார். இதில் 12 வெற்றியை பதிவுசெய்து முன்னிலை வசிக்கிறார். இதுவரை தொடர் ந்து டிராவிட் (16 போட்டி, 8 வெற்றி), கங்குலி (15 போட்டி, 8 வெற்றி) ஆகியோர் உள்ளனர்.




# விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் ஷரபோவா, சானியா வெளியேற்றம்

(லண்டன்)

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடர் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்து வருகிறது. போட்டியின் 3ஆவது நாளான நேற்று முன்தினம் பெண்கள் பிரிவில் அதிர்ச்சிகரமான சில முடிபுகள் கிடைத்தன.

2004ஆம் ஆண்டு சம்பியனும் முன்னாள் நம்பர்-1 வீராங்கனையுமான மரிய ஷரபோவா (ரஷ்யா) 2ஆவது சுற்றில் ஆர்ஜென்டினாவின் கிசலா டுல்கோவை எதிர் கொண்டார்.

இந்த ஆட்டத்தில் ஷரபோவாவுக்கு கடுமையான நெருக்கடி தந்த கிசலா முதல் செட்டை வென்று 2ஆவது செட்டிலும் முன்னணியில் இருந்தார்.

அதன் பின்னர் சரிவில் இருந்து மீண்டு 2ஆவது செட்டை தனதாக்கிய ஷரபோவா கடைசி செட்டில் கோட்டை விட்டார். முடிவில் கிசலா 6-2, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் ஷரபோவாவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

2 மணி 13 நிமிடங்கள் இந்த ஆட்டம் நீடித்தது. இதற்கு முன்பு ஷரபோவாவுடன் மோதிய 2 ஆட்டத்திலும் கிசலா படுதோல்வி அடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு ஷரபோவா 2ஆவது சுற்றுடனேயே வெளியேறி இருந்தார்.

### சானியாவும் வெளியேற்றம்

இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சாவும் 2ஆவது சுற்றுடன் நடையை கட்டினார். உலக தரவரிசையில் 85ஆவது இடம் வசிக்கும் அவர் தரவரிசையில் 27ஆவது இடம் வசிக்கும் தனது நெருங்கிய தோழியான சோரனா கிர்ஸ்டியாவை (ருமேனியா) சந்தித்தார்.

இந்த ஆட்டத்தில் சானியா நிறைய தவறுகள் செய்ததால் அவரால் வெற்றிப்பாதைக்கு செல்ல முடியவில்லை. 82 நிமிடங்கள் நடந்த ஆட்டத்தில் சானியா 4-6, 4-6 என்ற நேர்செட்டில் தோல்வியடைந்தார்.

தானாகவே செய்யக்கூடிய தவறுகளை சானியா 30 முறை செய்தார். அது மட்டுமின்றி முக்கியமான கட்டத்தில் டபுள்போல்ட் எனப்படும் வலையில் தொடர்ந்து அடிக்கும் தவறினை 6 முறை கண்டார்.


விம்பிள்டன் வரலாற்றில் சானியா இதுவரை 2ஆவது சுற்றை தாண்டியதில்லை. 2005ஆம் ஆண்டு 2ஆவது சுற்றிலும், 2006ஆம் ஆண்டு முதல் சுற்றிலும், 2007 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் 2ஆவது சுற்றிலும் தோல்வி கண்டு இருந்தார். அந்த சோகப்பயணம் இந்த முறையும் அவருக்கு தொடருகிறது.

மற்றொரு ஆட்டத்தில் சுலோவெக்கியாவின் டேனிலா ஹன்ட்சோவா 6-3, 7-5 என்ற நேர் செட்டில் ஜி செங்கை (சீனா) வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

நாடியா பெட்ரோவா (ரஷ்யா), அய் சுகியாமா (ஜப்பான்), எலினா வெஸ்னியா (ரஷ்யா), டொமினிகா சிபுல்கோவா (சுலோவாக்கியா), ரஸ்ஸானோ (பிரான்ஸ்) ஆகியோரும் தங்களது ஆட்டங்களில் வெற்றி கண்டனர்.

### ஜோகோவிச் முன்னேற்றம்

ஆண்கள் ஒற்றையர் 2ஆவது சுற்றில் 4ஆம் நிலை வீரர் செர்பியாவின் ஜோகோவிச் 7-5, 6-1, 6-4 என்ற நேர் செட்டில் ஜேர்மனியின் சிமோன் குரேலை விரட்டி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.



போட்டித்தர நிலையில் 18ஆவது இடம் வசிக்கும் ஜேர்மனியின் ரெய்னர் ஷூட்லர் அதிர்ச்சி தோல்வியை தழுவினார். அவரை இஸ்ரேல் வீரர் துடி செலா 7-6 (7-3), 6-3, 6-2 என்ற நேர்செட்டில் தோற்கடித்தார். மற்ற ஆட்டங்களில் மார்ட்டி பிஷ் (அமெரிக்கா), சாங்கா (பிரான்ஸ்) உள்ளிட்டோர் வெற்றிபெற்று 3 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

# குடாநாட்டுப் பத்திரிகை ஆசிரியர்களுடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு பத்திரிகைகள் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் எரிக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூன்று பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் தொலைபேசிக் கலந்துரையாடலை நடத்தினார்.

நேற்று இரவு 8.30 மணியளவில் தொலைபேசி சுற்றில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர், உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.வித்தியாதரன், யாழ் தினக்குரலின் ஆசிரியர் மு.வாமதேவன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது பத்திரிகை நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் சம்பவம் தொடர்பான விசாரணை போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன. (ந)

# பத்திரிகைகள் எரிப்பு பலரும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மூன்று பத்திரிகைகளும் நேற்றைய தினம் இனந்தெரியாதவர்களால் எரிக்கப்பட்ட சம்பவத்தை பலரும் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பத்திரிகை எரிப்புக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் இது தொடர்பில் பூரண விசாரணைகளை நடத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. (ந-5)

## சில்லறையாகவோ மொத்த...

இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கியிருந்த வேளையில் ஐக்கிய தேசியக் கட்சியும் அதற்குச் சார்பான ஊடகங்களும் அரசாங்கத்துக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்தன.

எனினும் அவர்களுடைய குற்றச்சாட்டுக்கள் எதற்கும் வரவேற்புக் கிட்டவில்லை. விலைவாசிகள் முந்நூறு வீதத்தால் அதிகரிக்கும் என்று கூறினார்கள்.

சர்வாதிகார ஆட்சி முறை என்றார்கள். ஜனாதிபதி தொடர்ந்து பதவியில் இருக்க முயல்வதாகக் கூறினார்கள்.

தேர்தல் நடத்தப்படமாட்டாது என ஐக்கிய தேசியக் கட்சி அச்சம் கொள்ளத் தேவையில்லை. நவம்பர் மாதம் 18ஆம் திகதிக்குப் பின்னர் எந்த நேரத்திலும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறலாம்.

தேர்தல்களை சந்திக்க நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. அதற்காகவே சில்லறை வர்த்தகத்தைப் போன்று ஒவ்வொரு தேர்தலாக நடத்தி வருகின்றதோடு அவற்றின் வெற்றிகளையும் கண்கூடாகக் கண்டு வருகின்றோம்.

சில்லறை அடிப்படையில் வேண்டுமானால் அவ்வாறும் அல்லது மொத்த அடிப்படையில் வேண்டுமானால் மொத்தமாகவும் தேர்தல்களை நடத்த அரசாங்கம் ஒருபோதும் தயங்காது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## கொடிகா...

இளைஞனின் சடலம் சாவகச்சேரி நீதவானின் உத்தரவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொடிகாமம் பொலிஸார் ஒப்படைத்தனர். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (ந-5)

## பத்திரிகை...

பொலிஸார் மற்றும் 51-வது படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் ஜெயசுந்தரவின் பணிப்பின் பேரில் 51-வது படையணித் தலைமை அலுவலர் மேஜர் நிஸங்க தலைமையிலான குழுவினர் விசாரணைகளை நடத்தினர்.

இதேவேளை நேற்று மாலை 5மணியளவில் 51-வது படைப்பிரிவின் தலைமை அலுவலகத்தில் பிரிகேடியர் ஜெயசுந்தர தலைமையில் மூன்று பத்திரிகைப் பிரதிநிதிகளும் பங்கேற்ற முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது பத்திரிகை நிறுவனங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதெனவும், பத்திரிகை விநியோகத்தின்போதும் படையினரின் பாதுகாப்பு இருக்குமெனவும் 51-வது படைப்பிரிவுத் தளபதி தெரிவித்தார். (ந-5)

## யாழ்.குடா...

போட்டு பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டன.

பத்திரிகையை எரித்தவர்கள் என்ன காரணத்துக்காக அதனைச் செய்தார்கள் என்பது தெரியாத விடயமாக இருந்த போதிலும்,

நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றை பிரசுரிக்காததன் காரணமாகவே மூன்று பத்திரிகைகளும் எரிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

ஆனால் நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு என்ற அநாமதேய துண்டுப் பிரசுரம் நேற்றைய பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதா இல்லையா என்பதை உறுதி செய்து கொள்ளாமலேயே அதிகாலை வேளையில் பத்திரிகை எரியூட்டல் நடந்தேறியுள்ளது.

இந்நிலையில் மூன்று பத்திரிகைகளும் எரிக்கப்பட்டதன் காரணங்கள் குறித்து விசாரணைகள் அவசியமாகியுள்ளன. (ந-5)

## கூட்டணி-சங்கரி...

தங்கராஜசிங்கம், பென்ஜமின் யேக்கப், அந்தோனிப்பிள்ளை மேரியம்மா, கார்த்திகேசு பீதாம்பரம், ஜமால்டீன் மொகமட் சலீம், அருளப்பு கொர்ணேலியஸ், தம்பிமுத்து கரைமணி, வல்லிபுரம் கந்தசாமி ஜெயபாலன், சுப்பிரமணியம் சோதிலிங்கம், அருமைநாதன் நவசுநாதன்,யோன் யோர்டன் யோகராசா,அன்னலிங்கம் உதயகுமார், அரியகுட்டி பரஞ்சோதி,நடராசா இராஜதேவன்,மரிய கெறற்றி அன்ரன்,கார்த்திகேசு நடராசா கனகரத்தினம்,தேவராசா பஸ்ரின் ராஜ்,வீரசிங்கம் சிவகுமார்,சுப்பிரமணியம் உதயகுமார்,கந்தசாமி பரமநாதன்,தியாகராஜா செல்வரஞ்சன், பெஞ்சமின் சௌந்தரசிங்கம் சுதர்சன், கதிரவேலு யோகேஸ்வரன், பரமசிவம் துசியந்தன்,சிற்றம்பலம் பிரதீபன், உசாந்தினி நடராசா ஆகியோர் உள்ளடங்கிய வேட்பாளர் பட்டியல் மாவை சேனாதிராஜாவால் சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடவுள்ளோர்: ஆனந்தசங்கரி முதன்மை வேட்பாளராகவும், இராஜதுரை புஷ்பராஜா,கதிரேசு இரத்தின சபாபதி,சின்னத்தம்பி இரத்தினசபாபதி,தர்மலிங்கம் நடேனேந்திரன்,இராசையா சங்கையா,சந்தியப்பிள்ளை பிரான்சிஸ்,குணசிங்கம் அமலசீலன்,செல்லையா விஜயரட்ணம், கந்தையா செல்வன்,திருநாவுக்கரசு ஶ்ரீதரன், ஜெயரத்தினம் சிற்பசபாநாதன்,ஆசிர்வாதம் பெர்னாண்டோ,அன்ரன்ராஜ் ஜேம்ஸ் சர்மிலா, கந்தையா சிவராஜா, காளிக்குட்டி ஜெயக்குமாரன்,கந்தையா ரவி,சிவசுப்பிரமணியம் திருக்கேதிஸ்வரன், நடராஜா மதியழகராசா, தவகுலசிங்கம் தர்ஜினி,இதயநிலா றஜீகரன், ஜெயபாலன் ஜெசிந்தன், வசந்தசந்திரன் எட்வின் யூலியஸ்,உலோகராசா மயூரன், கேசவன் செந்தில்ராஜா, தம்பிராஜா நிமல்ராஜ், ஶ்ரீரஞ்சன் நிஜாசன், சதனராஜா சதீஸ்கண்ணா,பரமேஸ்வரன் இராகுலன் ஆகிய வேட்பாளர்களின் பட்டியலை ஆனந்த சங்கரி சமர்ப்பித்தார்.

சுயேட்சைக் குழு-1 கப்பல் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. அகமது சுல்தான் சுப்பையான் முதன்மை வேட்பாளராகவும்,மீரான் கண் முகம்மது காசின்,முகபது சர்பு முகமது ஜலீம்,ஹஸன் குத்துஸ் உனைஸ், முகமது ஹம்ஸா முகமது சினாஸ்,முகமது ஹுஸைன் தம்பி ஹாமீம், முகமது புஹாசி நாவசின்,தவ்பீக் செய்ரைஸ், முகைதீன் அப்துல் காதர் ஜருபர், முகமது சலீபு முகமது வாஹீத், முகமது கஸ்தத்தீன் நிலாம்தீன்,கந்தசாமி சிவராஜன், பரராஜசிங்கம் ஶ்ரீபாலகிருஸ்ணன்,இந்துமதி மாணிக்கம்,முத்துமுகமது நிபாஹீர், விக்னேஸ்வரன் ராதிகா,இப்ராகீன் முகமது லஹீர், ஜவ்பர் முகமது ஜாவாஹீர்,முகமது அலியார் [illegible]சர்,மீரா லெப்பை முகமது நபாய்ஸ்,ரெய்னா முகமது முஹமது முயீன், இஸ்மத் இனூன் முகமது ராமிஸ்,உமர் பாருக் பைபால் உமர், சாமூல் கமித் ரிஸ்வான், செலாப்தீன் அஹார் முஹமது,சாருல் ஹமித் முஹமது இர்ஷாந், சுல்தான் மரைக்கார் முஹமது ஜவாகீர், ரெய்னா முஹமது முஹமது சிராஜிதன் ஆகியோர் போட்டியிட உள்ளனர். (ந-5,7)

## புலிகள் அழித்தொழி...

பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீண்டும் பயங்கரவாதம் தோன்றிவிடாமல் இருப்பதற்கு சகல பிரிவுகளையும் பலப்படுத்த வேண்டும். அரசியல், நிர்வாக ரீதியில் மட்டுமல்லாது பாதுகாப்பு ரீதியிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலமாகவே பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காது.

முன்னாள் பாதுகாப்பு செயலாளரின் பதவி, பதவியாக மட்டுமே இருந்தது. ஆனால் இவரே நிர்வாக ரீதியில் இணைந்து ஒருங்கிணைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தார்.

எதிர்கால பாதுகாப்புச் செயலாளர்கள் நிர்வாக ரீதியில் மட்டுப்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. புலனாய்வுத்துறைகளை மத்தியஸ்தப்படுத்துவதற்கான நடவடிக்கை இருக்கவில்லை. அதிகாரம் தவறான ஒருவரின் கைக்கு செல்வதனால் பிழைகள் இடம்பெறலாம்.

முகத்துடன் கோபித்துக் கொண்டு மூக்கை வெட்டிக்கொள்ள முடியாது.பொது ஒழுங்குப் பத்திரமின்றி தனித்தனி தாளத்திற்கு ஆட முயற்சித்தால் உருவாகபோவதைத் தடுக்க முடியாது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டாலும் புலியின் ஆவிகள் பேயாக ஆடுகின்றன. இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் இராணுவ முகாம்களை நிர்மாணிக்க வேண்டாம் என்று இந்தியாவிடம் கோருகின்றது என்றார். (ந-5)

## புலிகளை நொண்...

சம்பந்தன் எம்.பி. அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இராணுவ மயமாக்கலின் மூலம் நாட்டை தொடர்ந்தும் பீதிக்குள் வைத்திருக்கவே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

தமிழர் பிரச்சினை அரசியல் ரீதியாக தீர்க்கப்பட வேண்டிய விடயம். புலிகளை நொண்டிச்சாட்டாக வைத்து இதிலிருந்து விலகிவிட முடியாது என வலியுறுத்துகிறோம்.

அத்துடன் தமிழர் பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்த்து விடலாம் என்று நினைப்பது முட்டாள்தனமாகும்.

இந்த முட்டாள்தனமான சிந்தனைகள் மேலும் ஒரு போராட்ட அமைப்பை உருவாக்கவே வழி வகுக்கும் என்றும் அக்கட்சி குறிப்பிட்டது.

பாதுகாப்பு பணியாட் தொகுதிக்கான தலைமை அதிகாரி என்ற புதியதொரு பதவியை உருவகித்து அந்த பதவியில் அமர்த்தப்படுபவருக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வாரி வழங்கப்படுகின்றன.

இந்த சட்டமூலத்தின் நியாயத் தன்மைகளைப் பார்க்கும்போது ஏன் இவ்வாறு கொண்டுவரப்படுகின்றன என்ற கேள்வி எழுகின்றது.

பிற பகுதிகளில் இருந்து நாட்டுக்கு எதிரிகள் இல்லை. நாட்டுக்குள்ளேயே அரசாங்கத்திற்கு எதிரிகள் இருந்ததாக கருதப்பட்டது. அதுவும் தற்போது முடிந்துவிட்ட கதையாகி விட்டது.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையிலும் கூட யுத்த பீதியை நாட்டுக்குள் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்பதே இன்றைய அரசாங்கத்தின் நினைப்பாக இருக்கின்றது. அதனாலேயே இந்த சட்டமூலமும் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார். (ந-5)


மானிப்பாயில்...........

100% Practical Education!!

பல புதிய விடயங்களுடன்

27/06/2009 4.00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பம் !!

Diploma in Mobile Phone Repairing

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :-

UNI

ICT Education Trainers

Manipay T.P:- 060 - 221 - 6433

(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

aat(Sri Lanka)

Foundation,Intermediate,Final

Registration is now open for anybody having 06 passes at GCE O/L

Medium :- -தமிழ் & English

விரிவுரைகள் ஆரம்பம் :-27-06-2009

Saturday 10.00am

- A/L 2009 பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பதிவினை தற்போது மேற்கொண்டு பரீட்சை முடிந்தவுடன் தொடங்கும் விசேட பிரிவில் இணைந்து கொள்ளலாம்.
- பதிவுகள் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்வதன் மூலம் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

Further Detail
Director
Jaffna College Undergraduate Dept,
464,Hospital Road,
Jaffna

(C-2674)


# மரண அறிவித்தல்

## மகேந்திரன் சசீந்திரன்

(பழைய மாணவன் கொக்குவில் இந்துக் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி A/L 2003)



யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட மகேந்திரன் சசீந்திரன் 22.06.2009 அன்று அகால மரணமானார். அன்னார் மகேந்திரன் (உரிமையாளர்-சாருஜன் பென்சி ஹவுஸ்) புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கஜேந்திரன், விஜேந்திரன், நிலாந்தி, சாருஜன் (சென் ஜோன்ஸ் கல்லூரி -2009 கணிதப் பிரிவு) ஆகியோரின் அன்பு சகோதரனும், மகிழ்பரா, சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 31, K.K.S வீதி, கொக்குவில் இல்லத்தில் 26.06.2009 இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

31, K.K.S. வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்.

(2878)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.